

# சுடர்

## மணிவிழா மலர்





**சுடர் இ.மகேந்திரன் மணிவிழாக் குழு**

**கொக்குவில்.**

**29-08-1999**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

302.012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர்

★

## சுடர் இ. மகேந்திரன்

## மணிவிழா மலர்

★

சுடர் இ. மகேந்திரன்

மணிவிழாக் குழு

கொக்குவில்

29-08-1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் குழு

திரு. து. வைத்திலிங்கம் — தலைவர்

திரு. கப்டன். என். சோமசுந்தரம்
திரு. பொ. சந்திரநாதன் — இணைச் செயலாளர்

திரு. கு. ஜெயந்தன் — பொருளாளர்

திரு. மு. வேலாயுதபிள்ளை — இதழ் ஆசிரியர்

திரு. கே. தேவராசா

திரு. கே. சிவராஜா

திரு. என். வன்னியசிங்கம்

திரு. என். வித்தியாதரன்

திரு. எம். எஸ். ஸ்ரீதயாளன்

திரு. க. பூபாலசிங்கம்

திரு. இ. செல்வராசா

திரு. இ. செல்வநாதன்

திரு. எஸ். உமாசுதன்

திரு. த. சகாதேவன்

திரு. தே. ஜெயக்குமார்

திரு. க. இ. முகுந்தன்

திரு. இ. சிவலிங்கம்

திரு. எஸ். சத்தியேந்திரன்

திரு. சு. சூரியகுமார்

திரு. எஸ். வரதஇராஜேஸ்வரமுதலி

திரு. இ. ஸ்ரீகாந்தன்

திரு. க. தர்மகுலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிவிழா நாயகரும் துணைவியாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சுடர்' விட்டுப் பிரகாசிக்கும் குடும்பம். (லண்டனில் வதியும் மூத்த புதல்வி சுஜாதா படத்தில் இல்லை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் இ. மகேந்திரன்
# மணிவிழா நிகழ்ச்சிகள்

இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி

காலம்: **29-08-1999** ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் **9.30** மணி (புதிய நேரம்)

தலைமை: **திரு. து. வைத்திலிங்கம்**
மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்
(தலைவர், மணிவிழாக் குழு)

**காலை 9.30 மணி:** கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் வழிபாடு.

**காலை 9.35 மணி:** ஆலயத்திலிருந்து மங்கள இசை முழங்க மணிவிழா நாயகரை குடும்ப சமேதராய் காங்கேசன் துறை வீதி வழியாக கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஹண்டி பேரின்பநாயகம் மண்டபத்துக்கு அழைத்து வருதல்.

**மு. ப. 10.00 மணி:** மங்கள விளக்கேற்றல்
தேவாரம்

அமைதி வணக்கம்

**மு. ப. 10.10 மணி:** வரவேற்பு நடனம்
கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவியர்

**மு. ப. 10.20 மணி:** வரவேற்புரை
திரு. கே. தேவராஜா
பதில் பீடாதிபதி, முகாமைத்துவத்துறை.
யாழ். பல்கலைக்கழகம்

**மு. ப. 10.30 மணி:** தலைமையுரை

**மு. ப. 10.45 மணி:** வாழ்த்துரைகள்

பிரமஸ்ரீ க. சிவதாஸக்குருக்கள்
பிரதமகுரு, கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன்
பேராயர், தென்னிந்தியத் திருச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மு. ப. 11.00 மணி:** *நயப்புரை*

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

திரு. க. சண்முகநாதன்
அரச அதிபர், யாழ்ப்பாணம்
தலைவர், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

திரு. க. சிவராமலிங்கம்
முன்னாள் பிரதி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி

திரு. க. சி. குகதாசன்
முன்னாள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி

திரு. த. அருணகிரிராஜா
உதவிக் கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி, யாழ். கல்வி வலயம்

திரு. பொ. கமலநாதன்
அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி

திரு. அ. சிறிக்குமாரன்
அதிபர், யாழ். இந்துக் கல்லூரி

திரு. க. குணபாலசிங்கம்
முன்னாள் அதிபர், வைத்தீஸ்வராக் கல்லூரி

திரு. ரி. தேவராஜா
தலைவர், கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

திரு. த. அழகரத்தினம்
அதிபர், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

திரு. இ. செல்வநாதன்
செயலாளர், கொக்குவில் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

செல்வன் ச. காந்தரூபன்
சிரேஷ்ட மாணவ முதல்வன், கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பிற்பகல் 12.30 மணி:** *மலர் வெளியீடு*

திரு. அ. பஞ்சலிங்கம்
முன்னாள் அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி

" **12.45 மணி:** *அபிமானிகள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்*

" **01.00 மணி:** *விழா நாயகர் உரை*

" **01.15 மணி:** *நடன நிகழ்ச்சி*

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவியா

" **01.45 மணி:** *நன்றியுரை*

திரு. பொ. சந்திரநாதன்
செயலாளர், மணிவிழாக் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பேரன்பும்! ஆற்றலும்! நல்லொழுக்கமுமுடைய கல்விமானாகிய மணிவிழாக்காணும் கடவுள்பக்தியுடைய சைவ அன்பர், திரு. இ. மகேந்திரன் அவர்கள் எங்கள் கிராமத்தில் பல கல்விமான்களை உருவாக்கித்தந்த கொக்குவில் இந்துக்கல்லூரியில் நல்லாசிரியராக கற்பித்து தன் திறமையால் உப அதிபராகி பின்னர் அதிபராகவும் அதிலும் இலங்கையிலே ''புகழ் பூத்த'' அதிபரில் ஒருவராகத் திகழ்ந்தார் என்றால் அதுமிகையல்ல.

சிரித்த முகமும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நல்லொழுக்கமுடைய இவர் எங்கள் கல்லூரியைச் சிறப்புப்பெற்ற கல்லூரியாகத் திகழ மிகவும் அரும்பாடுபட்டு வெற்றியும் பெற்றார். காலை 8.00 மணிக்கு இவர் பாடசாலை வந்தால் தினசரி மாலை 7.00 மணிக்குத்தான் தனது வீட்டிற்குப் போவார். அதிலும் எமது பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் போட்டி, பேச்சுப்போட்டி இவற்றுக்குச் சென்றால் அவர்கள் வரும் வரை காவல் இருந்து அவர்களை வீட்டிற்கு அனுப்பிய பின்னர்தான் தனது வீட்டிற்கு அவர் செல்வார்.

அவர் எவ்வளவு கடுமையானவரோ, அதற்குமென்மேலும் மாணவர்களில் மிகவும் பாசமுமுடையவர். அவர் ஒவ்வொரு மாணவனையும் தன் பிள்ளைபோன்று மிகவும் கரிசனையுடன் கவனித்தார் என்றால் அது மிகையல்ல. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிள்ளைகளை ஆலய வழிபாட்டிற்கு அனுபபித் தானும் வந்து எம்பெருமானை வழிபட்டு மாணவர்களுக்கு கடவுள் பக்தியையும், கல்வியையும், நல்லொழுக்கத்தையும், அறிவாற்றலையும் வளர்ப்பதில் மிகவும் மனவிருப்பத்துடன் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த அந்த நல் ஆசான் ஓய்வுபெறுவது எங்கள் எல்லோருக்கும் வேதனையைத் தந்தாலும் அவர் ஆற்றிய அரும்பெரும் பணிகளை நினைத்து மன மகிழ்ச்சியடைகின்றோம்.

அவர் ஓய்வு பெற்றாலும் அவர்பணி காலத்தாலும் அழியாதது. இப்படிப்பட்ட கல்விமானுக்கும், அவர்தம் பாரியாருக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் நீண்ட ஆயுளும் சகல ஐஷ்வர்யங்களும் கிடைக்க எல்லாம் வல்ல வள்ளி, தேவசேனாசமேத ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானை வணங்கி எனது நல்லாசிகளை கூறிக்கொள்கின்றேன்.

''ஸர்வே ஜனா: சுகினோ பவந்து,
ஸமஸ்தசன் மங்களாநி பவந்து''

ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்,
கொக்குவில்.

**சிவஸ்ரீ க. சிவதாசக்குருக்கள்**
பிரதம சிவாச்சாரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வித்தியாசமான மனிதன்

சுடருக்கு வயது 60. நம்ப முடியவில்லை. யாழ். இந்துக் கல்லூரியில அவரை ஒரு விளையாட்டு வீரனாகப் பார்த்த காட்சிகள் உள்ளத்தில் பசுமையாக உள்ளன.

சுடர் ஒரு வித்தியாசமான மனிதன். அவர் ஒரு விளையாட்டு வீரன், இலக்கிய வாதி, நல்ல பேச்சாளன், எழுத்தாளன் இத்தனைக்கும் மேலாக ஒரு சமயவாதி. ஆம், சற்று தீவிர போக்குக் கொண்ட சமயவாதி எனின் தவறாகாது. அதற்கு அவரது குடும்பப் பின்னணியும் சூழல் பின்னணியும் காரணமாக அமைந்திருக்கலாம்.

பலர் அரச சேவையில் இருந்து ஒய்வு பெற்றால் அனைத்துப் பணியிலிருந்தும் ஒய்வு பெற்று விடுவார்கள்.

சுடர் இ. மகேந்திரன் இதற்கு மாறுபட்டவராகக் காட்சியளிக்கின்றார்.

சாரணர் இயக்கத்திலும் சமய அமைப்புக்களிலும் அவரது பணி இப்பொழுது தான் பிரகாசிக்கின்றது. இந்நிலை என்றும் நீடிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.


**க. சண்முகநாதன்**
அரச அதிபர்
தலைவர்,
யாழ் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை நாட்களில்..



ஆசிரியராக.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1953இல் யாழ் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்.இந்துக்கல்லூரி மெய்வல்லுநர் அணி. நடுவரிசையில் நிற்பவர்களில் வலதுபுறத்தில் இரண்டாவதாக (இலக்கம் மறைக்கப்பட்டுள்ளது) நிற்கின்றார் மாணவர் மகேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1953இல் யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ். இந்துக் கல்லூரி உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரன் இ.மகேந் திரன். (பின் வரிசையில் வலமிருந்து மூன்றாவதாக).



1954 இலும் இரண்டாம் இடம் பெற்ற அதே அணி. (வலமிருந்து மூன் றாவதாக மகேந்திரன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1954 இல் யாழ். இந்து சரித்திரக் குடியியல் சங்கத்தில் மகேந்திரன் (பின்வரிசையில் இடமிருந்து மூன்றாவதாக).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1954இல் யாழ். இந்துக் கல்லூரி மெய்வல்லுநர் அணி வீரனாக மாணவன் மகேந்திரன். (அதிபர் வி.எம். ஆசைப்பிள்ளைக்கு பின்னால் நிற்கின்றார்)




1954 இல் யாழ்.இந்துக் கல்லூரியில் இல்லச் சம்பியன்களாகத் தெரிவான பசுபதி இல்லத்தின் வீரனாகப் பங்கேற்றபோது. (பின்னால் நிற்பவர்களில் வலமிருந்து மூன்றாவதாக).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தன்னுடைய இரண்டாம் பிரிவு உதைபந்தாட்ட அணியின் தலைவர் ஆர்.மகேந்திரன் என்ற நிறைவான அடிக்குறிப் புடன் கல்லூரியின் 'இந்து இளைஞன்' - வருடாந்த சஞ்சிகையில் யாழ். இந்துக் கல்லூரி பிரசுரித்த படம்.



1955 இல் தோல்வியே அடையாத யாழ். இந்துவின் இரண்டாம் பிரிவு அணியின் தலைவர் மகேந்திரன். (மத்தியில் அமர்ந்திருக்கின்றார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் மூத்த உறுப்பினராக. (எழுபதுகளின் முற்பகுதியில் எடுக்கப்பட்ட படம். இடப்பக்கத்திலிருந்து நான்காவதாக அமர்ந்திருக்கிறார் மகேந்திரன்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் இ.சபாலிங்கம் ஓய்வு பெற்றதை ஒட்டிய நிகழ்ச்சியில் உரை.





யாழ்.இந்து அதிபர் பி.எஸ்.குமாரசுவாமி ஓய்வு பெற்றதை ஒட்டி ஜொலி ஸ்ரார்ஸ் வி.க.நடத்திய பிரிவுபசார விழாவில் கழகத்தின் உப தலைவராக உரை நிகழ்த்தும் மகேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் இந்து மைதானத்தில் உதைபந்தாட்ட
மத்தியஸ்தர் மகேந்திரன்.
உதவி மத்தியஸ்தர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்க
பரிசளிப்புவிழாவில் ஏற்பாட்டாளராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கச் செயலாளராக மாவட்ட மெய்வல்லுனர் போட்டிகளை நடத்தியபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாளனுக்கு ஒரு மணிவிழா

நாங்கள் அன்று தமிழ் பள்ளிக்கூடம் என்று அழைத்த யாழ். இந்துக் கல்லூரி ஆரம்பக்கலவன் பாடசாலையில் படித்த நாள் முதல் பின்னர் யாழ். இந்துக் கல்லூரியில் படித்த நாள்கள் கழிந்து இன்று வரை என்னுடன் அன்றும் இன்றும் போல பழகி வரும் என் இனிய நண்பன் மகேந்திரன் என்ற பண்பாளனுக்கு மணிவிழா எனக் கேட்டபோது மட்டில்லாத மகிழ்ச்சி அடைகிறேன். மாணவனாய், ஒருதரமான உதைபந்தாட்ட வீரனாய் பண்புள்ள மத்தியட்சராய், நல்ல சாரணனாய், நல்லாசானாய், நல்லதொரு அதிபராய் பல் வேறு கோணங்களில் நான் என் இனிய நண்பனைப் பார்த்து ஆனந்தப்பட்ட நாள்கள்பல எந்த ஒரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் ஒரு தீவிரத்துடன் அதில் எந்த ஒரு எதிர்ப்பு இருந்தாலும் அவற்றை எல்லாம் வென்று தனது வெற்றியை நிலைநாட்டும் போது ஒரு மெல்லிய புன்னகையை வெளிப்படுத்துவார்.

யாழ். இந்துக் கல்லூரியின் வளர்ச்சியோடு நண்பர் மகேந்திரனின் வாழ்வும் கலந்து நிற்பதை யாரும் மறக்க முடியாது.

அவருடைய பேர்த்தியாராகிய அமரர் புண்ணியநாச்சி அம்மையார் அன்போடு மனமுவந்து இந்துக்கல்லூரிக்கு அளித்த நிலத்தில் தான் இன்றைய வைரவர் ஆலயமும் அதன் அருகில் அமைந்துள்ள கட்டிடங்களும் நிலை நிற்கின்றன. மகேந்திரனுடைய இளமைநாள்கள் கல்லூரி வளவிற்றான் கலந்து நின்றன. இன்றும் நிற்கின்றன.

கல்லூரியின் ஒவ்வொரு சம்பவத்திலும், அவர் ஈடுபடாத நாள்கள் இல்லை. யாழ். இந்துவின் புகழ் பூத்த மாணவர்களுள் அவர் ஒருவர்.

கல்லூரி இந்து இளைஞர் மன்றம், சரித்திர மாணவர் சங்கம் போன்ற அமைப்புக்கள் யாவற்றிலுமே இவரது குரல்தான் ஓங்கி நிற்கும். யாழ். இந்துவுக்கு பல்வேறு துறைகளில் புகழ் சேர்த்த மாணவர் அணியில் இவரது பங்களிப்பு சாதாரணமானதல்ல. இவர் உதைபந்தாட்ட வீரனாய் மைதானத்தில் இறங்கினால் உற்சாகம் கரைபுரண்டு ஓடும். இவர் ஒரு சுற்றுப் பிரயாணத்தில் இடம் பெற்றுள்ளார். என்றால் அங்கு மாணவரின் உற்சாகத்துக்கு ஒரு எல்லை இருக்காது.

மகேந்திரன் சாரணனாய் இருந்த காலம் பொற்காலம். சாதாரண சாரணனாய் ஆரம்பித்து அதன் வளர்ச்சியில் தன்னை முற்றாக இணைத்து. அதில் உள்ள உயர்ந்த விருதுகள் பலதைத் தனதாக்கி, யாழ். மாவட்டத்தின் ஆணையாளராகத் திகழ்ந்ததைப் பலரும் மறந்திருக்க முடியாது.

யாழ். இந்துவின் சகோதரக் கல்லூரியான கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரிய சேவையில் தன்னை இணைத்துக்கொண்ட நண்பர் மகேந்திரன் தன்னை முற்றும் முழுதாக கல்லூரியோடு சங்கமமாக்கி விட்டு பல்வேறு நிலைகளில் சேவை புரிந்ததை நான் மகிழ்வோடும் பெருமையோடும் கண்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கொக்குவில் இந்துவில் சேவை ஆற்றிய மகேந்திரன் ஆசிரியனாய், உபஅதிபராய், அதிபராய் இருந்த காலம் கல்லூரியிற் பொற்காலம் என்றுதான் கூறவேண்டும்.

என்னுடைய மனைவி, மூன்று பிள்ளைகள் யாவரும் என்இனிய நண்பன் மகேந்திரனுடைய மாணவர்கள் என்று சொல்லுவதில் நான் எப்பவுமே பெருமை அடைவது வழமை.

எனக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் கழகத்தின் செயலாளராய் சிறிது காலம் கடமையாற்றும் வாய்ப்புக்கிடைத்தது.

எந்த ஒருவிடயமாக இருந்தாலும் ஒரு கண்டிப்பு, கண்காணிப்பு, அவதானம், பரிவு, என்று பல்வேறு நிலைகளில் தனது ஆளுமையை நிலை நாட்டி தனது பணியை ஒழுங்காகச் செய்ததை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் கண் கூடாகக் கண்டுள்ளேன்.

கொக்குவில் இந்துவில் அவர் அதிபராய் கடமை ஆற்றிய சமயத்தில் கல்லூரியின் கிரிக்கெட் அணி - வெற்றிகள் பல ஈட்டி முன்னணியில் நின்ற சிறப்பை எப்படி எடுத்துரைப்பது? அவர் மாணவருக்கு அளிக்கும் உற்சாகம்நிறைந்த உரைகள் அவ் வெற்றிகளுக்கு உரமாக அமைந்தன என்பதை நான் இங்கு கூறத்தேவையில்லை.

கல்லூரியின் வளர்ச்சிக்காக வடபால் அமைந்துள்ள காணியை துணிவுடன் கொள்வனவு செய்து மாணவர்களைக் கொண்டே விவசாயத்தை செய்விக்க வேண்டும் என்று அவர் கொண்டு பல முயற்சிகளை எடுத்தார்.

சமுதாய வளர்ச்சி என்பது கல்லூரி மாணவர்கள் மனப்பண்பின் வளர்ச்சியில் தான் தங்கி உள்ளது என்பதை எப்பவுமே வலியுறுத்தும் நண்பர் மகேந்திரன் சமய உணர்வும், அறிவும் மாணவர் மத்தியில் நிச்சயம் இருக்க வேண்டும் என்ற விடயத்தில் மிகத்தீவிரமாய் நின்று செயற்பட்டார்.

யாழ். சைவபரிபாலன சபை, அதனோடு இணைந்த "இந்து சாதனம்" இதழ் ஆகியவற்றில் மகேந்திரனுடைய பங்களிப்பு அதிகம். எல்லாவற்றையும் விட யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் தோன்றிய 'சுடர்' என்னும் சஞ்சிகையின் பொறுப்பாசிரியராய் இருந்து சிறந்த இலக்கியவாதியாகத் திகழ்ந்த பெருமை அவருக்குண்டு எல்லாத் திறமைகளும் தன்னகத்தே கொண்ட பண்பாளன் மகேந்திரனுக்கு, அவரது அயராத சேவையை மதித்துப் போற்றும் முகமாக, நடக்கவிருக்கும் மணிவிழா மலருக்கு எனது மன உணர்வுகளை வெளிப்படுத்துவதில் பெருமையும் சந்தோஷமும் அடைகிறேன்.

என் இனிய நண்பன் மகேந்திரனும், அவரது இனிய மனைவி திருமதி மகேந்திரன், அவர்களுடைய பிள்ளைகள் யாவரும் நீடூழி வாழ்ந்து சமுதாயத்துக்கு உறுதுணையாய் நிற்பார்கள் என வாழ்த்துகிறேன்.

கச்சேரி
யாழ்ப்பாணம்.

**து. வைத்திலிங்கம்**
மேலதிக அரச அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

எங்கள் அதிபர் திருவாளர் இ. மகேந்திரன் அவர்களுக்கு இன்று மணிவிழா.

இவ்விழாவின் ஞாபகச் சுடராக வெளிவரும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் அளவிலா மகிழ்வடைகிறேன்.

எமது கல்லூரித் தாயான, கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1960 ஆம் ஆண்டு ஆசிரியராகப் பணியேற்றவர். நீண்டகால ஆசிரிய சேவையின் பின் இக்கல்லூரியிலேயே அதிபர் பதவியைப் பெற்று பெருமையுடன் சேவையாற்றியது மட்டுமன்றி, யாழ் இந்துவின் அதிபராகவும் பின்னர் உதவிக்கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றி இன்று ஓய்வு பெற்றுள்ளார்.

அதிபர் மகேந்திரன் அவர்களுக்கு இன்று மணிவிழா எடுக்கப்படுகிறது என்றால் அதற்கு அவரிடத்தில் காணப்பட்ட பல்வேறு திறன்களே காரணமாக அமைந்தனவென லாம். அவர் இக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் நல்லாசிரியராக மட்டுமன்றி ஒழுக்கத்தை மாணவர்களிடையே இறுக்கமாகக் கடைப்பிடித்தவர். வரலாற்றுப் பாடத்தையும், பொருளியல், தமிழ் போன்ற பாடங்களையும் சிறப்பாகக் கற்பித்து பல மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிய பெருமை இவருக்குண்டு.

அதிபர் பதவியை 02-05-1991 இல் பெற்றபொழுது திரு. அ. பஞ்சலிங்கம் அதிபர் அவர்கள் விட்டுச் சென்ற பணியை சிறப்பாக நடாத்தியவர். இவரது காலத்தில் இக் கல்லூரி பல்வேறு வளர்ச்சிகளைப் பெற்று உயர்வடைந்தது. ஆண்களுக்கான பாண்ட் வாத்தியத்தை எமது கல்லூரியில் உருவாக்கி யாழ். மாவட்டத்திலேயே சிறப்பிடம் பெற வைத்தவர்.

எமது கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராகவும், சிறந்த பயிற் றுனராகவும் விளங்கி உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், இரண்டிலும் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைகளை ஏற்படுத்தி கல்லூரிக்குப் புகழ் தேடித்தந்தவர். குறிப்பாக எமது கல்லூரியின் உதைபந்தாட்டச் சாதனைகளுக்குக் காரணகர்த்தாவாக விளங்கியவர் என்றால் மிகையாகாது.

எமது கல்லூரிச் சாரணிய மாணவர்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டியவர். அத்துடன் யாழ். மாவட்ட சாரணியத்தின் ஆணையாளராகவும் விளங்கியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றோடு பாடரீதியான, சேவைரீதியான மன்றங்கள், கழகங்களைப் பாடசாலை மட்டத்தில் உருவாக்கி, மாணவர்களின் திறமைகளுக்கமைய அவர்களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதில் முழு ஆர்வங்காட்டியவர்.

இவர் அதிபர் பதவியை ஏற்ற காலத்திலிருந்து எமது பிரதேசம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கிய போதும் அவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து கல்லூரியை வளர்த்தெடுத்த செயற்றிறன் மிக்க அதிபராக விளங்கியவர். இதனால் இக்கல்லூரிச் சமூகம் இவர்மீது மட்டற்ற மதிப்பும் ஆதரவும் வைத்திருந்ததை நான் நன்கறிவேன்.

சிறந்த கல்விமான், பண்பாளன், நிர்வாகி, பேச்சாளன், எழுத்தாளன், மனித நேயம் மிக்கவர் — இத்தகைய பண்புகள் பலகொண்டு விளங்கியவரைக் கல்வியுலகம் இலகுவில் மறந்துவிடமுடியாது.

திருவாளர் மகேந்திரனுக்கு மணிவிழா எடுக்கப்படும் இன்றைய நாளிலே அவரையும் அவரது குடும்பத்தினரையும் வாழ்த்துகிறேன்.

**பொ. கமலநாதன்**
அதிபர்,

கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்குவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீடு வாழ்க!

திரு. இராஜதுங்கம் மகேந்திரன் உடனான எனது நட்பு பல தசாப்த வரலாற்றை உடையது.

தொழிற் துறையில் கூட எனது அடியொற்றியவராகவே செயற்பட்டுவந்தமை விதியை வகுத்த இறையின் நியதி என்றுதான் கூறவேண்டும்.

அவர் ஆர்வம் கல்விப் புலத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை, அதற்கும்மேலாக உதைபந்தாட்டம், சாரணியம், நாடகம், பத்திரிகை எனப் பல்வேறு பரப்புக்களாக விரிவடைந்தன.

இவ்வாறு பல்வேறான புலங்களினூடாக வளர்த்துக்கொண்ட ஆற்றல் ஆசிரியரா கவும், உப அதிபராகவும், அதிபராகவும் பணிசெய்த காலத்தில் அவரை மிகுந்த ஆளுமைகொண்ட நிர்வாகியாக உயர்த்தியது. அவர் செயற்பட்ட பதவிகள் அத்தனை யிலும் தனக்கென ஓர் முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளார்.

நீடூழி வாழ்ந்து எம் சமூக மேம்பாட்டிற்கு மேலும் மெருகூட்ட எனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அ. பஞ்சலிங்கம்
ஓய்வு பெற்ற அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
யாழ். இந்துக் கல்லூரி.

உரும்பராய்.

# சேவைக்கு ஒருவர்

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. இ. மகேந்திரன் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியிற் படிக்கும் காலத்தில் கல்வியிற் சிறந்து விளங்கியதோடு, விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கி தான் கற்ற கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்தவர்.

இளைஞராக இருக்கும் போதே கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் குழாமில் சேர்ந்து துடிப்புடன் செயற்பட்டவர். கற்றல் கற்பித்தற் செயற்பாட்டுடன், விளையாட்டுத்துறையையும், சாரணியத் துறையையும் முன்வந்து பொறுப்பேற்று அதன் வெற்றிக்காக உழைத்து பாடசாலையின் பெயரை முதன்மைப்படுத்தியவர். இவர் எக்கருமத்தையும் தானே பொறுப்பெடுத்து சிறப்புடன் செய்யும் ஆற்றல் உடையவராக இருந்தமையால் இவர் காலத்தில் அதிபர்களாய் இருந்தவர்களுக்கு பாடசாலையை நடாத்தும் பொறுப்பு மிக இலகுவாக இருந்து வந்துள்ளது. அவ்வாறு அவர் செயற்பட்டதால் ஆசிரியராக இருந்தவர் பிரதி அதிபராகவும், பின் அதிபராகவும் வர வாய்ப்பு ஏற்பட்டது.

இவர், செய்யும் கருமங்களைப் புதுமையானதாகவும், முதன்மையானதாகவும் செய்ய வேண்டும் என்ற விருப்புடையவர். அதனால் இவரது காலத்தில் கற்றல் கற்பித்தற் செயற்பாடாயினும், மற்றும் பிற செயற்பாடாயினும் சிறப்பானதாக நடைபெற்றதோடு, மாணவர்களின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் என்றும் இல்லாதவாறு உயர்ந்து காணப்பட்டதை நாமறிவோம். இவர் காலத்தில் கல்லூரியின் புகழ் மேலோங்கி நின்றதையும் மறக்க முடியாது.

இத்தகைய சாதனை வீரருக்கு, விளையாட்டு வீரருக்கு, யாரையும் அரவணைத்துச் செல்லும் பண்பாளருக்கு அவரது 60 வது வயதில் மணிவிழா நடாத்தி, கௌரவித்து, பாராட்டுவது முற்றிலும் பொருத்தமானதே. இவரைப் பாராட்டுவது இவர் செய்த சேவைக்கான பாராட்டுதல்களாகும். அன்னாரும் அன்னாரது குடும்பத்தாரும் பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளை மனதார வேண்டுவோம்.

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை,
கொக்குவில்.

ந. அழகரத்தினம்
அதிபர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அன்னையால் வளர்க்கப் பெற்ற நன்மக்கட் பேறுகளில் இன்றைய மணிவிழா நாயகன் திரு. இ. மகேந்திரன் அவர்களும் ஒருவராவார்.

அவரிடத்தில் நிறைந்திருக்கும் அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், இரக்கம், துடிப்பு ஆகிய பண்புகளை உயிர்களுக்கெல்லாம் பயன்படுவகையில் உயிரூட்டி வளர்த்தவள் கல்லூரி அன்னையே என்றால் மிகையாகாது.

எமது கல்லூரியில் ஆரம்பக்கல்வி முதல் உயர்தர வகுப்பு வரை கல்வி பெற்ற பெருமையால் மகிமை பெற்றவர்.

ஆசிரியராக, அதிபராக, கல்வியதிகாரியாக, பிரதிக் கல்விப்பணிப்பாளராக பதவி வழி நின்று பணியாற்றினாராயினும் பதவிகளுக்கு அப்பாற் சென்று தொண்டாற்றினார்.

சமூக சேவையே தன் தேவையெனக் கொண்டு நலிந்து தொந்திருக்கும் மக்களுக்கு ஆற்றும் சேவையால் மனநிறைவு கொள்பவர்.

தனது சேவையால் நிறைவு பெற்ற மனமகிழ்ச்சியே மணிவிழா நாயகனை அழகும் இளமையும் துடிப்பு மிக்க இளைஞனாகத் திகழ வைக்கின்றது.

ஆலயங்கள் முதல் விளையாட்டரங்குகள் வரை அவரது சிந்தனைச் செயற்பாடுகள் வளர்ச்சியடைந்து உயர்ச்சி பெறவும்—

—அதனால் மணிவிழா நாயகன் மனமகிழ்ச்சி பெற்று—

—பல்லாண்டு வாழ்கவென வாயாரப்போற்றி உளமாரப் பாராட்டுகிறேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அ. சிறிக்குமாரன்
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிகள் பல

திரு. இ. மகேந்திரனின் வெள்ளி விழாவிற்கு இவ்வாழ்த்துச் செய்தியை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வேற்றுமையில் ஒற்றுமையைக் கண்டவர்கள் நாம்.

அவரது ஆற்றலும் அனுபவமும் எனக்கு மிகவும் உதவியாக இருந்தன — இருப்பன.

புகழ் பூத்த அதிபரில் ஒருவராகிய திரு. இ. மகேந்திரனின் சேவைக்காலம் ஒப்பற்றது.

எமது கல்லூரியில் தொடர்ச்சியாக 33 வருடகாலம் சேவை செய்த ஒருவர் எம்மை விட்டுப் பிரியும் போது கண்கலங்காமல் எவரும் இருக்க முடியாது:

அவரது சேவை பழைய மாணவருக்கும் எமக்கும் இன்றியமையாதது மட்டுமல்லாது தொடர்ந்தும் கிடைக்கும் என்ற பரிபூரண நம்பிக்கை எமக்கு உண்டு.

அவரும் அவரது குடும்பமும் நீடூழி வாழ ஆசிகள் பல.

நன்றி

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில்.

**தம்பிஐயா தேவராசா**
தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்துறை வித்தகர்

சுடர் இ. மகேந்திரன் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவன். யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர்களில் ஒருவர்.

சுடர் இ. மகேந்திரன் யாழ். இந்துவின் மைந்தனாக இருந்த பொழுதிலும் அவரது ஆசிரியத்துவக் காலம் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கே பெரும் பகுதி சித்தித்தது.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் அவர் வகித்த பதவிகள் பல. அங்கு முதலாம் தர அதிபராகப் பதவி உயர்வு பெற்று யாழ். இந்துவுக்கு மாற்றப்பட்டார்.

யாழ். இந்துக் கல்லூரியில் அவர் மாணவனாக இருந்த காலை விளையாட்டுத் துறையில் சிறப்புற்று விளங்கினார். சாரணியமும் அவருக்குப் பிடித்த ஒன்றாகும்.

இவ்விரு துறைகளிலும் அவர் பணி நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும்.

சுடர் நல்ல எழுத்தாளர் - பேச்சாளர். இத்திறமைகள் அவரைச் சமயத்தின் பால் ஈர்த்தன.

சைவ பரிபாலன சபையின் நிர்வாக சபை உறுப்பினராக, தலைவராக, சபையின் இந்துசாதனம் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி உள்ளார்.

இப்பொழுது அவர் அரச சேவையில் இருந்து மட்டுமே ஓய்வு பெற்றுள்ளார். ஏனைய துறைகளில் முழு வீரியத்துடன் அவர் செயலாற்றவுள்ளார். அவரது பணியையும் சேவையையும் பொது நிறுவனங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகின்றேன்.

சகல துறைகளிலும் சுடர் இ. மகேந்திரன் என்னுடன் இணைந்து செயற்பட்டுள்ளார். இந்த இணைப்பு பல்லாண்டு பல்லாண்டு நீடித்து நிலைக்க இறைவன் அருள் புரிவாராக.

யாழ்ப்பாணம்.

நா. சோமசுந்தரம்
தலைவர்,
சைவ பரிபாலன சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் நிறைந்த அதிபர்

எமது பெருமைக்குரிய அதிபர் திரு. இ. மகேந்திரன் அவர்களை நினைந்தாலே உள்ளம் மகிழும். அவர் ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய காலம் கல்லூரிக்கும் கல்வித் திணைக்களத்துக்கும் பெருமை சேர்ப்பதாகும். நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தை எண்ணிப்பாப்பதுண்டு. தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆழ்ந்த புலமை கொண்ட அவர் மாணவர்களைப் கவர்வதிலே வல்லவர். மாணவர்களைப் பயப்படுத்தி அல்லாது தட்டிக்கொடுத்து வேலை வாங்குவதில் வெற்றிகண்டவர். அவர் மகிழ்ச்சியான மாணவர்கள் திறமையாகக் கற்பார்கள் என்ற கொள்கையாளர். இதன் காரணமாகவே அவரிடம் கற்ற காலத்தை மறக்க முடியவில்லை.

எமது அதிபர் மகேந்திரன் அவர்கள் அதிபராக இருந்த காலம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பொற்காலம் எனக்கூறினால் அது மிகையாகாது. இக்காலத்தில் கல்லூரி கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் மேன்மையுற்றதுடன் புறச்செயற்பாடுகளிலும் வளர்ச்சி கண்டது. அதிபரின் வழிநடத்தலுக்கிணங்க பல மாணவர்கள் பல்வேறு துறைகளிலிருந்தும் பல்கலைக்கழகம் புகுந்தனர். இன்று இலங்கையிலும் ஏன் உலகத்திலும் எமது கல்லூரி மாணவர்கள் தலை சிறந்த கல்விமான்களாக விளங்குவதற்கு திரு. மகேந்திரன் போன்ற அதிபர்களே காரணமாவர்.

எமது அதிபர் பதவிவகித்த காலத்தில் கொக்குவில் இந்துக்கல்லூரி புறச்செயற்பாடுகளில் தலைசிறந்து விளக்கியது. துடுப்பாட்டத்திலும் சரி, உதைபந்தாட்டத்திலும் சரி எமது கல்லூரி பெற்றிருந்த புகழ் அதிபர் மகேந்திரனையே சாரும். பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி அவர்கள் எமது கல்லூரி விளையாட்டில் சாதனை புரிவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தவர் திரு. மகேந்திரனே ஆவார். அது மட்டுமன்றி சாரணர் இயக்கத்தைக் கட்டிவளர்ப்பதிலும் எமது கல்லூரிக்கு உதவியவர் அதிபர் மகேந்திரனே எனக் கூறினால் அது மிகையாகாது.

பல்கலைக் கழகத்தில் தனது திறமையால் பெற்றுகொண்ட "சுடர்" பட்டத்தை தனது வாழ்க்கைக்கே உரித்தாக்கியவர் எமது அதிபர் மகேந்திரன். ஆசிரியராகவும், அதிபராகவும் சுடர்விட்டது போன்றே பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பிரகாசித்து இன்று தனது அறுபது அகவையைப் பூர்த்தி செய்துள்ளார். இத்தகைய பெருமைக்குரிய அதிபர் தனது குடும்பத்தவருடன் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் எமது சமூகத்துக்கு இளைப்பாறியதன் பின்னரும் சேவையாற்றவேண்டும் என்ற ஆவலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வளமுடன் வாழ்க பல்லாண்டு"

க. தேவராஜா
தலைவர்
வணிகத்துறை.
யாழ் பல்கலைக் கழகம்.

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள நெஞ்சங்களே........

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

எனும் வள்ளுவன் வாய்மைக் கண், தம் வாழ்வை அமைத்துக் கொண்டு, எமது அன்னையின் பணியனைத்தும் தனதாக்கித், தாம் பெற்ற கல்வியினை மற்றையோரும் பெற்று இன்புறும் வண்ணம் நல்வழிகாட்டியாய் விளங்கியவர் தான் எம் கொக்குவில் அன்னையின் அதிபர் திரு. இராஜதுங்கம் மகேந்திரன் அவர்கள்.

நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்குத் தடைகளும், சோதனைகளும் மிகுந்த கால கட்டங்களில் எல்லாம் இல்லந்தனை மறந்து, மெய்வருத்தம் பாராது, கண்துஞ்சாது, கடமையே கண்ணாக அன்னையின் வளர்ச்சிதனை பல்வகைத் துறைகளிலும் ஏணியாக நின்று முன்னேற்றப்பாதையில் வழி நடத்திச் சென்று, பெரும் பேரும் புகழும் பெற்றுத் திகழும் வண்ணம், சிறப்புறச் செய்தவர் அதிபர் திரு. இ. மகேந்திரன் அவர்கள்.

இத்தகைய பெருந்தகைக்கு மணிவிழா எடுப்பது சாலப் பொருத்தமானதேயாம். அவர் தம் பெருமைகளை எடுத்தியம்பும் வண்ணம் மணிவிழா மலர் வெளிவருவது மேலும் சிறப்பான அம்சமே ஆகும்.

அந்த வகையில் இம்மலர், மிளிரும் வகையில் நம் அதிபர் அவர்களின் சேவை தனைப் பாராட்டும் நிமித்தம் தம் வாழ்த்துரைகள், ஆசிகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகிய இன்னோரன்னவற்றைத் தந்து மணிவிழா மலருக்கு மெருகூட்டிய பெரியோர்கள், அன்பர்கள், ஆர்வலர்கள் அனைவர்க்கும் மணிவிழாக் குழுவினர் சார்பில் நன்றியை நவில்கின்றோம்.

அறுபது அகவைகள் பூர்த்தியாகியும், இன்றும் துடிதுடிப்பான இளைஞராக, தூய்மைக்கு இலக்கணமாக, எளியராய், இன்முகத்தினராய் புன்சிரிப்புடன் விளங்கும் அதிபர் அவர்கள், மேலமேலும் தம் சமூக, இலக்கியப் பணிகள் சிறக்கவும் அவர் தம் குடும்பத்துடன் எல்லா நலங்களும், வளங்களும் பெற்று விளங்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவான். அவனருள் கிட்டும் என்று உள்ளன்புடன் வாழ்த்துகின்றேன்.

மு. வேலாயுதபிள்ளை
ஆசிரியர்.

கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு நல்லாண்டாய் வாழியவே

சுடர்மகேந் திரனெனும் சுந்தரத் தோற்றத்தான்
இடரகற்று மிணையிலா வினியவனே — படர்கின்ற
புகழுடையான் பண்பாளன் பாரினிலே பல்லாண்டு
அகமகிழ்ந்து வாழியவே யமைந்து.

திருமுருகன் திருவருளிற் றிளைக்கின்ற கொக்குவில்
தருமோரிந் துக்கல்லூரியதி பனாகித் தகைமையாற்
பெருமைசேர் பணியாற்றிப் பக்தியொடு பண்பையுமே
அருமையாய் அளித்திட்டா யையாநீ வாழியவே.

அந்தமிலாப் புகழுடையாய் அனந்தநற் குணமுடையாய்
செந்தமிழும் சீரியநற் சைவமும் சிறந்திட்டே
விந்தைமிகு வினைசெய்தாய் வித்தைக்குரியோனே
பைந்தமிழ் போலையாநீ பல்லாண்டு வாழியவே.

கலைத்துறை யதனைக்கல் விப்புலத்தி னிலேஐயா
நிலைநிறுத்த நீமுயன்றே திட்டங்கள் தீட்டினையே
குலையாவுன் முயற்சியினால் வரலாறும் வளர்கிறதே
மலையாக வுயர்ந்தோனே மாண்புடனே வாழிநீயே.

பொதுநலத் தொண்டினையே புண்ணியமா மென்றனை
எதுவெமைப் பணபுடையோ ராக்குமாறது கேட்டோம்
அதுவேநல் லொழுக்கமென நவின்றுவழி காட்டினாய்
சதுர்மறை போதித்தநற் சாதுரியனே வாழிநீயே.

கல்லூரியிலே விளையாட்டுத் துறையெலாம் மேலோங்கப்
பல்லோரும் பாராட்டும் படியொருசீர் நிலைசெய்தாய்
வல்லோனே பேர்பூத்த நிர்வாகியெனத் திகழ்ந்தாய்
கல்நெஞ்சும் கசிந்துருகும் சொல்லுடையாய் வாழிநீயே.

ஆறுமுகன் திருவருளால் ஆரமுதாம் லலிதாவோடும்
பேறுடைய மக்களொடும் பல்லாண்டு காலமாக
ஈறில்லாப் பதங்கள்யா வையும்பெற் றுயர்ந்தே
வீறுடைய ஈழமிதில் மன்னவனே வாழிநீயே.

மணிவிழாக் காணுகின்ற மாணிக்கமே மகேந்திரனே
அணியணியாய் வாழ்ந்திடவே வந்தோமையா தமிழ்மேலே
தணியாதபெருந் தாகமுடையாய் தண்டமிழ் போல் தரணியிலே
நனிநன்றாய்ப் பல்லாண்டு நல்லாண்டாய் வாழியவே.

கவியாக்கம்
பண்டிதர் க. ஈஸ்வரநாதபிள்ளை

வாழ்த்துபவர்
**த. தனபாலசிங்கம்**
கொக்குவில் இந்துக்கல்லூரி நூலகர்

(மணிவிழா நாளன்று வாசித்து கையளிக்கப்படவுள்ள வாழ்த்துப்பா இது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப்பற்றுக் கொண்ட அதிபர் மகேந்திரன்.

பத்து வருடங்களுக்கு முன்பு எங்கள் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றினை திரும்பிப் பார்க்கிறோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து இடமாற்றம் பெற்று யாழ். இந்துக் கல்லூரியில் அதிபர் பதவியை ஏற்றுச் சென்ற திரு. அ. பஞ்சலிங்கத்திற்கும், கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக இருந்து அதிபர் பதவியை ஏற்றுக் கொண்ட திரு. இ. மகேந்திரன் அவர்களுக்கும் பெரியளவிலான பாராட்டு விழா ஒன்றினை நாங்கள் நடாத்தினோம்.

அந்த நிகழ்வில் வாழ்த்துரைகள், பாராட்டுரைகள், வாழ்த்துப்பாக்கள், அன்பளிப்புகள் வழங்கி எங்கள் நன்றியினை அவர்களுக்கு செலுத்தியதை நினைவுகொண்டு மகிழ்ச்சி அடைகிறோம்,

திரு. மகேந்திரன் அவர்கள் யாழ். நகரப் பகுதியில் பிறந்து, உரும்பிராயில் மனை புகுந்தார் என்றாலும் அவர் தனது கூடிய காலங்களைக் கொக்குவிலிலேயே கழித்துள்ளார் என்பதை மறுக்க யாரும் இல்லை.

தமிழ்ப் பற்றும் சமூகப் பற்றும் கொண்ட அதிபர் எங்களது கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட நிகழ்வுகள், விழாக்கள் போன்றவற்றிற்கு நாங்கள் அவருக்கு அழைப்பிதழ் அனுப்பாமல் இருந்ததும் இல்லை, அதில் கலந்து கொள்ளாமல் இருந்ததும் இல்லை.

எங்கள் மொழியை - எங்கள் இனத்தை - பிரதேசத்தை நேசித்த ஒருவர் இன்று மணிவிழாக் காணுகின்றார் என்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

மணிவிழாக் காணும் திரு. மகேந்திரன் அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் நீண்டகாலம் வாழ்ந்து எமது இனத்திற்கும், மொழிக்கும், சமூகத்திற்கும் தொடர்ந்து சேவையாற்றுவதற்கு எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

**இ. இந்திரலிங்கம்**
தலைவர்
கிராம அபிவிருத்திச் சங்கம்

கொக்குவில்

# மணிவிழாக்காணும் மாவட்ட சாரண ஆணையாளர்

1978ம் ஆண்டிலிருந்து இன்று வரை ஏழு மாவட்ட சாரண ஆணையாளர்களின் கீழ் உதவி மாவட்ட ஆணையாளராக நான் பணியாற்றியுள்ளேன். ஆனால் மாவட்ட சாரண ஆணையாளராகத் திரு. இ. மகேந்திரன் அவர்கள் இருந்த காலத்தில் சாரணியம் நன்கு தழைத்தோங்கி வளர்ந்தது என்பது வரலாற்று உண்மை.

திரு. இ. மகேந்திரன் அவர்கள் யாழ். மாவட்ட சாரணிய ஆணையாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நாள் முதல் இன்று வரை அவர் சாரணிய வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையை நாம் நன்கு அறிவோம். அவர் பொறுப்பேற்றதும் பல வருடக் கணக்காக நிறைவேற்ற முடியாது முடங்கிப் போய்க்கிடந்த சாரணர்களுக்கான பாடத் திட்டத்தினை அச்சேற்றி வெளிக்கொணர்ந்தார். நீண்ட காலமாக இயங்காதிருந்த சாரணர் கிளைச்சங்கத்தினை மாதம் ஒரு தடவையேனும் கூட்டம் நடாத்தி சாரணர் சங்கத்தின் கௌரவசெயலாளர் திரு. R. நடராசா அவர்களுக்கு ஊக்கமளித்தார். சாரணர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தைக் கூட்ட பலதடவை முயற்சி எடுத்தும் இற்றை வரை அது நடைபெற முடியாது போனது மனவருத்தத்திற்குரிய செயல்.

யாழ் மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் காரியாலயம் யுத்தத்தின் அனர்த்தங்களால் சேதமுற்று பாவிக்க முடியாதிருந்த காலங்களில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் உதவி மாவட்ட ஆணையாளர்களின் கூட்டம், சாரணத் தலைவர்களின் கூட்டங்கள், சாரண அணித்தலைவர்களின் பாசறைகட்கும், சாரணர்களின் பாசறைகட்கும் சாரணக் கிளைச்சங்கத்தின் கூட்டங்கட்கும் இடம் தந்து உதவியதுடன் இவற்றை தாமே முன்னின்று நடத்தித் வந்துள்ளார்.

இவ்வாறு பல வழிகளிலும் உதவியதுடன். சாரணியர் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபு அவர்களின் நினைவு நாளை பெப்ரவரி 22ந் திகதி வருடந்தோறும் கொண்டாடுவதற்கும் சாரணர்களின் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் மிக்க உறுதுணையாக இருந்தவர். நீண்ட காலமாக புறக்கணிக்கப்பட்ட யாழ் மாவட்ட சாரணியர்கள் இவரது காலத்தில் சாரணிய ஜம்போறியில் பங்குபற்றுவதற்கு பலவேறு நாடுகட்கும் எமது சாரணர்கள் தெரிவு செய்யப்பெற்று பங்குபற்றிக் திரும்பியமையும் குறிப்பிடத் தக்கது.

இவருடைய காலத்தில் அதிகமான சாரணர்களுக்கு ஜனாதிபதி விருதுகிடைக்கப் பெற்றமை மறக்கமுடியாது இதன் மூலம் பூரண ஆளுமை உடைய மாணவர்களை உருவாக்கியுள்ளார்.

அதுமட்டுமல்ல போர்க்காலச் சூழலிலும் எமது யாழ். மாவட்ட சாரணர்களை சகோதரத்துவ அடிப்படைக்கமைய இலங்கையில் ஏனைய மாவட்டங்களில் நடைபெற்ற சாரணிய ஜம்போறி சாரணிய விழாக்கள் அனைத்திலும் பங்குபற்றி பரிசுகள் பெறுவதற்கு பெரிதும் உதவியவர். இவரது பணி மென்மேலும் சிறக்கவும், பல்லாண்டு காலம் நீடுழி வாழவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வேண்டுகிறோம்.

சாரணசேவையில்
இ தவகோபால்
மாவட்ட பயிற்சி ஆணையாளர்.

யாழ்ப்பாணம்.

# அதிபரும் சமூக உறவும்

மதிப்பிற்குரிய அதிபர் மகேந்திரன் அவர்கள் நல்லாசிரியனாய், உறுதுணை மிக்க உப அதிபராய், ஆளுமை நிறைந்த அதிபராகக் கொக்குவில் இந்துக்கல்லூரியில் பணிபுரிந்தவர். கல்லூரியின் வளர்ச்சிக்கும். பெருமைக்கும் அயராது உழைத்தவர். அதனால் கல்லூரியின் வளமான வாழ்விற்கு சமூக உறவு மிக மிக அவசியம் என உறுதியாக நம்பினார். அந்த உறவினை நன்முறையில் பேணிக்காத்து கல்லூரியின் உயர்வுக்குப் பயன்படுத்தினார்.

கொக்குவில் கிராமத்தில் காணப்பட்ட சகல சமூக நிறுவனங்களோடும் தொடர்பு கொண்டிருந்தார். அவ்வமைப்புக்களின் பயன் மிக்க செயற்பாடுகளுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கினார். உற்சாகம் ஊட்டினார். அந்த நிறுவனங்களின் சகல விழாக்களிலும் தலைவராகவும், பிரதம விருந்தினராகவும் கருத்துரை வழங்குவோராகவும் கலந்து கொண்டார். அச்சந்தர்ப்பங்களில் தன் மனத்திற்கு சரியெனப்பட்டதை துணிவுடன் எடுத்துக் கூறினார். இவ்வாறு செயற்பட்டு அவற்றின் ஆதரவைப் பெற்று அதனை கல்லூரியின் நலனுக்காக பயன்படுத்திக் கொண்டார்.

பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரது இன்பத்திலும் துன்பத்திலும் தவறாது கலந்து கொண்டார். உங்கள் குடும்பத்தில் நானும் ஒருவன எனச் செயற்பட்டார். இம் முப்பிரிவினரையும் அடிக்கடி கல்லூரிக்கு அழைத்தார். அவர்களது கருத்துக்களைக் கேட்டார். அவற்றுக்கு மதிப்பளித்தார். கல்லூரி விழாக்களில் இவர்களுக்குச் சரியான சந்தர்ப்பங்கள் வழங்கி சீர் செய்தார். கல்லூரி எங்கள் "சமூகச் சொத்து" என்ற உணர்வினை இவர்களிடத்து ஆழமாக வேரூன்றச் செய்வதில் வெற்றி கண்டார். இச் சமுகம் எல்லா வேளைகளிலும் தாமாக முன்வந்து கல்லூரிக்கு வாரிவழங்கி, உதவிகள் புரியும் சூழலை உருவாக்கி வைத்தார்.

கல்லூரிக் கடமையை கண்ணெனப் போற்றினார். இதனால் கொக்குவில் சமுதாயத்தில் கற்றுவரும் கல்விமான்களும், முயற்சியாளரும் செல்வந்தரும் நிறைந்த சமுதாயமாக உருவாகியுள்ளது. இது என்றென்றும் நினைவு கூரத்தக்கது.

தமிழ் மொழி, தமிழர் சமுதாயம், சைவம் என்றென்றும் உயர்நிலையில் இருக்க வேண்டும் என்ற உண்மை உணர்வோடு உழைத்து இன்று அறுபது வயதினை அடைந்து 'மணிவிழா' காணும் அதிபர் அவர்களை மனப்பூர்வமாக வாழ்த்தி மகிழ்வு கொள்கிறேன்.

கொக்குவில்

லயன். R. செல்வநாதன்
தலைவர்
லயன்ஸ் கழகம்
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமைச் சுடர்

ஆயிரக் கணக்கான மாணவர்களின் வாழ்வில் அறிவொளி ஏற்றிய நாடறிந்த நல்லாசான் திரு இ. மகேந்திரன் அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகிறேன். பள்ளிப்பருவத்திலேயே மைதானச் சாதனைகள், இலக்கியச் சாதனைகள் எனச் சுடர் விட்டுப் பிரகாசித்தவர் இவர்.

யாழ் இந்துக் கல்லூரியின் வரலாற்றோடும், கொக்குவில் இந்துக் கல்லூரி வரலாற்றோடும் இணைந்து நிற்கும் இனிய ஆசானின் மணிவிழாவை முன்னிட்டு அவரது இனிய அபிமானிகள் விழா எடுத்துப் போற்றுவது நன்றிக்குரிய நற்பணியாகும்.

அஞ்சா நெஞ்சோடு அழகு குலையாத இனிய வதனத்தோடு ஆயிரமாயிரம் மாணவர்களுக்கு அறிவுப் பசியைத் தீர்த்து வைத்த இவ்வாசிரியபிரான் ஆசிரிய சமூகத்திற்கே முன்னோடியாக விளங்கியவர்.

மாணவர்களை ஒழுக்க சீலராக வழிநடத்துவதில் சாதுரியம்மிக்க சாதனையாளர் என்று குறிப்பிடத்தக்களவிற்கு அவரது செயற்திறமை போற்றப்படுகிறது. காலம் தவறாத கடமையாளன் எனக் கல்லூரிச் சமூகங்களால் கருதப்பட்ட உத்தமர்.

வெண்மை உடையிலே அவரது புறத் தோற்றம் உள்ளது போல் உள்ளமும் என்றும் வெண்மையாகவே இருப்பதை அவரோடு பழகிய உள்ளங்கள் உணரும்.


அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை, யாருக்கும் அஞ்சாத ஞானச் செருக்குடன் யாழ்ப்பாணக் கல்வியுலகில் கல்லூரிகளை வழிநடத்திய புகழ் பூத்த அதிபர்கள் வரிசையில் மதிக்கத்தக்க நிலையில் புகழுடன் ஓய்வு பெற்று பாராட்டுப் பெறும் ஆளுமைச் சுடர் திரு. இ. மகேந்திரன் அவர்களின் புகழ் என்றும் சிறக்க வாழ்த்தி அவர் நிறைந்த நலத்தோடு நீடுழி வாழ சொல்விற்பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல நல்வித்தை யாவும் தரும் கலைவாணியைப் பிரார்த்தித்து அமைகிறேன்.

''பாலாவி''
மருதனார்மடம்,
இணுவில்.

ஆறு. திருமுருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக் கல்லூரி ஒரே சமயத்தில் 21 இராணிச் சாரணர் விருது பெற்ற மாணவர்களை உருவாக்கிய சமயம் கல்லூரிச் சாரணர் ஆசிரியராக. (வலது புறத்தில் இரண்டாவதாக அமர்ந்திருக்கின்றார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக்கல்லூரி விஜயதசமி நிகழ்ச்சியில்
பிரதி அதிபராகப் பங்குபற்றியபோது....



கல்லூரியின் பரிசளிப்புவிழா ஒன்றில்
பிரதி அதிபர் உரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்து அதிபராக
திரு. இ.மகேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துவில் பதவியேற்கும் புதிய அதிபரும், இடமாற்றம் பெற்றுச்செல்லும் பழைய அதிபரும் கொக்கு வில் மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கத்தினால் வர வேற்கப்பட்டபோது.



புதிய அதிபரை பழைய மாணவர் கள் வரவேற்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதிய அதிபர் துணைவியோடு வரவேற்கப்படுகிறார்.




புதிய அதிபருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட சம்பியனான கல்லூரியின் 15 வயதுக் குட்பட்ட கிரிக்கெட் அணி.



கல்லூரியின் இன்ரக்ட் கழகத்தினருடன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவ தலைவிக்கு சின்னம் சூட்டும் அதிபர்.



ஆசிரியர் தினத்தில் அதிபருக்கு மாலை அணிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரி மாணவ முதல்வர்களுடன்.



கல்லூரி சாரணர் குழுத் தலைவர்கள் வழிகாட்டியான அதிபருடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரி கல்விக் கண்காட்சி திறந்து
வைக்கப்பட்ட போது...



கண்காட்சியைப் பார்வையிட்ட சமயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பழைய மாணவர் சங்கக் கலைவிழாவில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய போது.



1994ஆம் ஆண்டு கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயற்குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொக்குவில் இந்து சாரணர் அணியை உருவாக்கிய மகேந்திரன்.



அநுராதபுரத்தில் நடந்த இலங்கைச் சாரணர் ஜம்பொறியில் முல்லைத்தீவு சாரணர் குழுத் தலைவராகவும் பிரதி மாவட்ட ஆணையாளராகவும் பங்குபற்றிய போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்லூரி பாண்ட் அணியுடன் அதன் சிற்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரி இந்துமன்றச் செயற்குழுவுடன்.



கல்லூரி ஆங்கிலக்கழகத்தின் தலைவராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்லூரி நிகழ்வு ஒன்றில் உரை நிகழ்த்தும் அதிபர்.




கொக்குவில் மேற்கு சி.சி.த.க.
பாடசாலைப் பரிசளிப்புவிழாவில்
பிரதம விருந்தினராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் மதியபோசன ஒன்று கூடலில் உரை.



1993இல் கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆரம்ப வைபவத்தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1981இல் கொக்குவில் இந்து உதைபந்தாட்ட அணியுடன்.



யாழ்.இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழாவை ஒட்டி
நடந்த பட்டிமன்றில் பங்குபற்றியபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பண்பாளர்

திருவாளர் மகேந்திரன் அவர்களுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்களும், யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்களும் இணைந்து மணிவிழா எடுக்கிறார்கள் என்ற இனிப்பான செய்தி யாவரையும் உவகையடையச் செய்கிறது.

திரு. இ. மகேந்திரனில் மேலோங்கி நிற்கும் ஏதோ ஒரு சிறப்புப் பண்பே இப்பேறு கிடைக்கக் காரணமாகிறது என்பதில் ஐயமில்லை.

ஆம். திரு மகேந்திரன் அவர்கள் ஒரு சிறந்த பண்பாளர்.

மெலிந்த, ஆனால் நெடிதுயர்ந்த தோற்றம்,

நிமிர்ந்த நடை,

நேரிய பார்வை,

பஞ்சைப்போன்ற வெண்ணிற ஆடை,

எந்நேரமும் சிரித்தமுகம், வாய் ஓயாத பேச்சு,

பிழைகளைக் கண்டால் கொதித்து எழுந்து கண்டிக்கும் தன்மை,

எல்லோரையும் சமமாக மதிக்கும் மனப்பாங்கு என்பன இப்பண்பாளனின் குணாதிகங்கள் ஆகும். அவருடன் பழகியவர்களுக்கு இது நன்கு புரியும்.

எனக்கு வயதில் இளையவரான திரு. மகேந்திரன் யாழ். இந்துவில் கல்வி கற்கும் நாள்களிலேயே நன்கு தெரிந்தவர்; நெருங்கிப் பழகியவர். அவர் கல்வி கற்பதில் மாத்திரம் தன் கவனத்தை செலுத்தாமல் கல்லூரியின் வெளிக்களத் தொழிற்பாடுகளிலும் நன்கு பங்கு பற்றியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்கும் வேளையில் உதைபந்தாட்டம், மெய்வல்லுனர் அணிகளில் அங்கம் வகித்து வெற்றிக்குத் துணை நின்றவர்.

யாழ். இந்து மாணவனாக இருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படித்து ஆசிரியத் தொழிலில் புகுந்தார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியில் பலகாலம் ஆசிரியராகவும், உப அதிபராகவும், அதிபராகவும், யாழ். இந்துவின் அதிபராகவும் பணி ஆற்றியவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக்கமைய தொழில் புரிந்தவர். பாடசாலைச் சூழலி லேயே தன் இருபத்து நான்கு மணி நேரத்தையும் செலவிடுவதை தன் இனிய பொழுது போக்காகக் கொண்டவர்.

தான் சேவை புரியும் தனது கல்லூரி வளரவேண்டும்; அதன் புகழ்பாரெங்கும் பரவவேண்டும்; அங்கு கல்வி கற்கும் மாணவர்கள் பல்துறைகளிலும் தேர்ச்சி பெற்று முதனிலை வகிக்கவேண்டும்: அவர்கள் பெருமையும் முன்னேற்றமும் பெறவேண்டும் என்ற இலட்சியத்துடன் சேவை செய்தவர்.

கல்லூரிச் சமூகத்தில் சிறந்த செல்வாக்கு உடையவர். யாழ் இந்துவின் அதிபராக பணிபுரிந்த காலம் குறுகியதாயினும் சிறப்புடையதே.

யார் தனது இலட்சியப்பாதையில் சீராக நடைபோடுகிறாரோ அவர் சமூகத்தில் செல்வாக்கைச் செலுத்தக் கூடியவராகிறார். இவ்வகையில் சமூக மதிப்புப்பெற்ற பண்டிதரான திருவாளர். மகேந்திரன் அவர்கள் ஆளுமை நிறைந்தவர், மாணவரிடை யேயும், ஆசிரியர் குழாமிடமும் சமூகத்திடமும் கல்வித்திணைக்கள உலகிலும் பெரு மதிப்பும் செல்வாக்கும் பெற்றவர் அவர்.

யாழ் இந்து பழைய மாணவர்சங்க செயலாளராக பணிபுரிந்தவர். இவர் 1950ம் ஆண்டுகளில் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகத்தில் இணைந்தார். கழக வளர்ச்சிக் காகப் பாடுபட்டவர். கழக உபதலைவர் பதவி வகித்து நெறிப்படுத்தியவர். விளை யாட்டுத்துறையில் அவர் காட்டிய ஈடுபாட்டுக்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். இவர் ஓய்வு பெற்ற பின் தன் முழுக்கவனத்தையும் ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டு கழக முன்னேற்றத்துக்காக செலவிடுவாரென நம்புகிறேன்.

பொற்பதி வீதி,
கொக்குவில்.

**க. பூபாலசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தில் நீங்காத கதாநாயகன்

புனிதமான ஆசிரியப் பணிக்குத் தம்மை இட்டு அப்பணியில் தன்னிறைவோடு சேவையாற்றி, அதன் பேறால் கல்வி விருத்தியில் முன்நிற்கும் கல்லூரி ஒன்றின் பிரதம ஆசிரியராய் முதல்வராய்ப் பொறுப்பேற்று நல்ல முகாமைத்துவ வளம் கொண்டு, கல்வித்திணைக்களத்திலும் உயர்பதவியை வகித்து சேவையிலிருந்து ஓய்வுபெறும் சுடர் இ. மகேந்திரன், அண்மைய காலத்தில் அனைவரது கருத்திலும் நீங்காத ஒரு கதாநாயகன் தான்!

அன்பினை, அறிவினை, கல்வியின் செழுமையை, ஒழுக்கத்தை, பண்பினை, பள்ளிமாணவர்க்கு பாய்ச்சும் பணியிலுயர்ந்தோய்! உமது பல்திறப்பட்ட சேவையால் மகிழ்ந்தனம்.

நீர் ஒரு அறிவாளி. ஆன்மீக வழிகாட்டி, இருளகற்றும் சுடர். உயர்ந்த பண்பாளன். ஊக்கவுணர்வின் சின்னம். எழுச்சியூட்டும் பேச்சாளன். ஏற்றமிகு குணநலத்தோன். ஒரு சாரணியன். ஓர்மம்மிகு தமிழன்பன்.

கொக்குவில் இந்துவுக்கு பெருமை சேர்த்துத்தந்த பெரியவர்கள் வரிசையில் நீங்காத இடம்தந்தோம். யாழ். மண்ணின் பெரிய கல்லூரிகளின் முதல்வராக முத்தெடுத்தாற்போல உம்மை யாழ். கல்வியுலகம் தேர்ந்தெடுத்த வெற்றியொன்றே போதும் உன்பெருமை சாற்ற. எமக்கறிவூட்டிய ஆசானாய் - எம்கல்லூரியதிபனாய் - ஆசிரியத்துவ வாழ்வின் வழிகாட்டியாய்-கல்விசார் பணியகத்தில் எனக்கு அருகிருந்து அன்புதந்த பெருமையால் உயர்ந்த உமது வாழ்வும் வளமும் பேரும் புகழும் சுடர்க என மனமொன்றித்து வாழ்த்துவேன்.

M. S. ஸ்ரீதயாளன்
கல்வி - உதவிப்பணிப்பாளர்.

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணவலயம்,
நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு"
— என்பது திருக்குறள்

மணி விழாக் காணும் எம் அதிபர் திரு. இ. மகேந்திரன் அவர்களுக்கும் இவ் வாசகம் மிகப் பொருத்தமானது.

வெள்ளை நிற உடை, வார்த்தையிலே கலகலப்பும் அதே வேளையில் கட்டுப் பட வைக்கும் திறனும் ஒருங்கே அமையப் பெற்றவர். கொக்குவில் இந்துக் கல்லூரி யின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும அயராது பாடுபட்ட நல்லாசான். இவரது துணைவியார் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர். பத்தாவுக்கேற்ற பதிவிரதை என்று கூறின் மிகையாகாது. அதிபரின் பணிக்கு உறுதுணையாக இருந்து விளங்குபவர்.

இவ்வாண்டு மணிவிழா நாயகராக விளங்கும் இப்பெரியாரின் உறுதி கொண்ட உள்ளமும் ஆன்மீக பக்தியும் சமூக நலன் பேணும் சேவைகளும் பாராட்டத்தக்கவை. எமது ஆலயத்தின் வளர்ச்சியில் அவரின் ஒத்துழைப்புக்கள் என்றும் மறக்க முடியாதவை.

பல்துறையிலும் சிறப்புற்று விளங்கும் அவரது பணி தொடர்ந்தும் எமது சமூகத் திற்கும் கிடைக்க எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருள் கிடைக்க வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**

கொக்குவில் — கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க! பணிகளைத் தொடர்க!

மனிதநேயம் மிக்க மாண்புடைய அதிபராகத் திகழ்ந்த மகேந்திரன் அவர்கள் மணிவிழாக் கண்டு ஓய்வு பெறும் இச்சந்தர்ப்பத்தில் அன்னாரை வாழ்த்திப் போற்றுவதிற் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம்.

இக்கட்டான ஒரு காலகட்டத்தில் கொக்குவில் இந்துவின் நாயகனாக விளங்கி தூங்காமை, துணிவுடமையுடன் அதன் கல்விப் பாரம்பரியத்தை, உயர் விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்ததுடன் தனித்துவமான வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்று வெற்றிகண்ட அன்னாரது சேவை என்றென்றும் நிலை பேறுடையதாகும்.

எமது பிரதேசத்தின் புகழ்பூத்த அதிபர்களில் ஒருவராக விளங்கிய அன்னாரது வழிகாட்டலையும் ஒத்துழைப்பையும் நொந்து போயுள்ள எமது சமுதாயம் சிறப்பாகக் கல்வி உலகம் என்றென்றும் எதிர்பார்த்து நிற்கிறது. அன்னார் நலமுடன் வாழ்ந்து நற்பணிகள் ஆற்றிட இறைவனை என்றும் பிரார்த்திப்போமாக.

ஆ. சி. நடராஜா
செயலாளர்,
வடமாகாண அதிபர்கள் சங்கம்.

யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் மறுபடியும் கிழியட்டும்...........

வசந்தகால வருகை

வாசனை மலர் தூவ

மழைமேகக் கூட்டம்

கருக்கொண்டு நாண......

வாழ்க்கை வயலுக்கு

வரம்பு கட்டும் முயற்சிக்கு

வளர்மதியாள் வழங்கும்

வாழ்த்து மடல் இது!

★

வாழ்வின் முதுமைக்கு,

கட்டியங்கூறும் விழா — அல்ல

வாழ்க்கை அனுபவத்திற்கு

சான்றிதழ் வழங்கும்

பட்டமளிப்பு விழா!

மணி விழா!

இதுவரை மனிதன் தன்னை

இனங்கண்டான் — இனி

இவனை

சமூகம் இனங்காணும்

★

கொக்குவில் இந்துவின்

அதிபர்கள் பட்டியலில்

மகேந்திரன் — என்பதும்

ஆழமானவேராகி விட்டது!

சிலிர்ப்பூட்டும் கம்பீரம்

தாயைப்போல் கண்டிப்பு

தந்தைபோல் ஆசுவாசம்

அர்ப்பணிப்பான சேவை

வெள்ளைநிற ஆடை — இவை

இவரின் அடையாளங்கள்!

★

அடைகாத்த வயது — இன்று

அலங்கரித்த மேடை மீது

அம்பலமாக்கப்படுகிறது — அல்ல

அங்கீகரிக்கப்பட்டது — ஒரு

மானிட சேவை!

இது

இனியும்

தொடரும்............

★

சம்பியன் லேன்,
கொக்குவில்.

வளர்மதி முன்னேற்றக் கழகமும்,
சனசமூக நிலையமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர்விட்டு ஒளிபிரகாசிக்க வாழ்த்துக்கள்

கல்வி நிர்வாக சேவையிலிருந்து 18-05-1999 அன்று ஓய்வு பெற்று தனது 60 வது அகவையைப் பூர்த்தி செய்து கொண்ட கொக்குவில் இந்துவின் முன்னாள் அதிபர் சுடர் இ. மகேந்திரன் அவர்களை வாழ்த்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததை இட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

அவர் தனது கல்விச் சேவையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து, பின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியராக, உபஅதிபராக, அதிபராக பதவி வகித்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அவர் தனது கல்விச் சேவையில் ஓரிரு வருடங்களைத் தவிர முழுமையாக கொக்குவில் இந்துவுடன் கலந்து அதன் மைந்தனாகச் செயற்பட்ட செயல்வீரன். இவர் கொக்குவில் இந்துவில் கால்பதித்து செயற்படாத துறையே இல்லையெனலாம். இவர் ''கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம்'' என்ற கருத்தளாம் மிக்க சமூக நிறுவனத்தின் உருவாக்கத் திற்குப் பெரும்பங்காற்றியவர் என்று கூறின் அது மிகையாகாது.

மேலும் இவரது காலத்தில் கல்வித்துறை விளையாட்டிலும், விளையாட்டுத்துறை கல்வியிலும் பரஸ்பரம் ஒன்றிணைந்தும், ஏனைய இணைப்பாட செயற்பாடுகளினூடா கவும இக் கல்லூரி சகல துறைகளிலும் சாதனை படைத்து, தனக்கென ஒரு தனித் துவமான இடத்தினைப் பெற்றுக்கொண்டது.

கொக்குவில் இந்துவின் பழைய மாணவர்களை அதிகம் கொண்ட எமது நிலையத்தின் வளர்ச்சியிலும், அதன் ஆரம்பகாலம் தொடக்கம் அதன் படிமுறை வளர்ச்சிக்காலம் முழுமையாகப் பெரும் பங்களிப்புச் செய்தவர். எமது விளையாட்டுக் கழகத்தின் ஆற்றல்கள், அனுபவங்களைக் கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சி யுடனும், கல்லூரியின் ஆலோசனை, அறிவுத்துறை, ஆளணி போன்ற வளங்களை எமது நிலையத்துடனும் பரஸ்பரம் ஒன்றிணைத்து கொக்குவில் இந்துக் கல்லூரி சமூகத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.

நாம் பல இடர்களைச் சந்தித்தபோதெல்லாம் எம்முடன் துணைநின்று எமக்கு ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கி எமது வளர்ச்சிக்குத் துணை நின்றவர். இவர் கொக்குவில் இந்துக்கல்லூரி சமூகத்திற்கு குரல் கொடுத்து அயராது உழைத்த பெருமகன்.

இவ்வாறானதோர் விளையாட்டு வீரனை, கல்விமானை, சிறந்த நிர்வாகியை, இலக்கியவாதியை, எல்லாவற்றிற்கும் மேலாக சிறந்த சமூகசேவையாளனை மணிவிழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதுடன் மேலும் பல்லாண்டுகள் அவரது சேவை எமது சமூகத்திற்குக் கிடைக்கவேண்டும் என்றும், பல்லாண்டு, பல்லாண்டு பார்சிறக்கப் பல்கலையில் பைந்தமிழில் பலம் மேவ, வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

நன்றி.

கொக்குவில்

**கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும், விளையாட்டுக்கழகமும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் குழுச் செயலாளரின் பேனாவிலிருந்து

எமது அதிபரின் மணிவிழா ஆண்டைக் கொண்டாடும் வகையில் பிரசுரிக்கும் இம் மலருக்கு இச் செய்தியினை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

"தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு"

என்பது பொய்யாமொழியின் வாக்கு.

இதற்கமைய கொக்குவில், யாழ் இந்துக் கல்லூரிகளில் அதிபராகக் கடமையாற்றிக் கல்விச் சமுதாயம் வளர்ச்சியுற்று, மேன்மையுறச் செய்தவர்தான் எம் அதிபர் திரு. இராஜதுங்கம் மகேந்திரன்.

யாழ். இந்துக் கல்லூரியில் தன் திறன்கள் அனைத்தையும் வெளிக்கொணர்ந்து நன்மாணாக்கனாகக் கல்வி கற்று, பல்கலைக்கழகம் சென்று, பலகலைகளும் கற்றுத் தேர்ந்து பட்டம் பெற்று, கொக்குவில் இந்துவின் நல்லாசிரியராக, உப அதிபராக, அதிபராகப் பணி புரிந்து அவராற்றிய சேவைகள் கணக்கிலடங்கா, வியத்தகு சேவைகளேயாம்.

கொக்குவில் இந்துவின் மைந்தர்களை ஏறத்தாழ முப்பது வருடங்கள் தன் ஆளுமையின் கீழ் நல்வழி நடத்தி, மேநிலைப்படுத்திய ஏணிப்படியாக நின்று உழைத்த பெருந்தகையாளர் தான் எம் அதிபர். அவரது பல்துறைசார்ந்த ஆளுமையின் கீழ் வளர்ந்தவர்களில் நானும் ஒருவன் என்பதை இங்கு குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றேன்.

கல்லூரியின் விளையாட்டு, சாரணீயம் போன்ற சகல இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் தானும் ஒருவராக நின்று கல்லூரியின் வளர்ச்சியை முன்னெடுக்க அரும்பாடுபட்டு உழைத்து, கொக்குவில் இந்து அன்னையின் நாமத்தை நாடளாவப் பரவச் செய்த பெருமையும் இவருக்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் வளர்ச்சிப்படிகளில் ''பாண்ட்'' வாத்திய இசைக்குழுவை உருவாக்கித் திறம்பட செயற்பட வைத்தவர். சைவபரிபாலனசபைத் தலைவராகச் சமயத் தொண்டுகள் புரிவதிலும் முன்னின்று உழைத்தவர் எம் அதிபர்.

வன்னி மண்ணில் உதவிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றித் தன் சேவையினின்று ஓய்வு பெறுமுகமாக யாழ். மண்ணிலும் சிறிது காலம் தன் சேவையைத் தொடர்ந்து இளைப்பாறியுள்ளார்.

இன்றும் இளைஞனாக சுறுசுறுப்புடன் செயலாற்றும் எம் அதிபர் அவர்களும், அவர்தம் குடும்பத்தாரும் எல்லா வளமும் பெற்றுச் சீரும் சிறப்புடன் திகழ எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியன் அருள் புரிவான்.

இம் மணிவிழா மலர் வெளியிட வேண்டுமென்று விரும்பி ஆக்கமும், ஊக்கமும் அளித்த பெரியோர்களுக்கும், முயற்சியில் முன்னின்றுழைத்த பழைய மாணவர்களுக்கும், நலன் நாடுவோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுமட்டுமல்ல மலருக்கு ஆசியுரை தந்த சமயப் பெரியார்களுக்கும், அறிஞர்களுக்கும், மலர் சிறப்புறத் தம் ஆக்கங்களைத் தந்து உதவிய அனைவர்க்கும், மலரின் வெளிப்புறப்படம் வரைந்து உதவியவர்களுக்கும், மிகக் குறுகிய காலத்திலே இம் மலரை அச்சேற்றித் தந்து உதவிய அச்சக ஊழியர்கள், உதயன் நிறுவனத்தார்க்கும் நன்றிகள் பல கூறி விடைபெறுகின்றேன்.

**பொ. சந்திரநாதன்**
செயலாளர்,
விழாக்குழு சார்பாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Friendship is the most beautiful flower in the garden of life"

My friendship with Mr. R. Mahendran began in the year 1957 when he came to Jaffna College from Jaffna Hindu College to prepare for the University Entrance Examination. He joined the H. S. C. "A" class of our College.

The coming of Mr. Mahendran brightened the Arts section of our College. The Tamil Society was given a fresh lease of life. The Tamil oratorical and journalistic skills which he had acquired at Jaffna Hindu College were very much appreciated by the students and teachers of Jaffna College.

In the year he came to Jaffna College he was elected President of the Tamil Society. The patron of the Tamil Society was Mr. K. E Mathiaparanam, a very religious and orthodox person. Mr. Mathiaparanam liked Mr. Mahendran because of his high sense of humour and communication skills. The Tamil Society which was dormant for a long time became one of the assiduous societies of Jaffna College. One of the first things which Mr. Mahendran did at Jaffna College Tamil Society was to conduct a "Valluvar Vilaa". The Secretary of the Tamil Society was the late S. Yoganathan who ended up as Asst Registrar (Establishments) of the University of Jaffna. I won the first prize in the Essay Compitition in connection with the Valluvar Vilaa. The second prize was won by Mr. S Kulasegaram of Chankanai, who later entered the legal profession. For the Valluvar Vilaa Mr. Mahendran invited Mr. Sivaramalingam his former teacher at Jaffna Hindu College.

Mr. Sivaramalingam and Mr. K. E. Mathiaparanam were the main speakers at this festival. I received a copy of "Bharathiyar Kavithaigal" from the hands of Mr. Sivaramalingam. I kept this book carefully till the upheavals of the year 1995, during which it was lost.

## Balu Mahendran and Sudar Mahendran:

The Tamil Society of Jaffna College brings very pleasant memories to me. Mr. B Mahendran who now shines in the Cine field in South India was also an active member of the Tamil Society. In the year 1958 there was a contest for the presidents post of the Society. Mr. Balu Mahendran began his election campaign with a promise of producing a fantastic drama for the Tamil Society. Some people who liked the high sense of humour of Mr. R. Mahendran supported him. But Mr B. Mahendran was elected president. During his tenure Mr. Sudar Mahendran brought many speakers from Jaffna and made them speak at the Tamil Society. Mahendran.R and Mahendran B, by their different skills made the Tamil Society a prestigious Society of the College.

## An Eloquent Orator:

Sudar Mahendran's popularity was not confined to the Tamil Society. His humour and sound knowledge of Tamil



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

language made him the most popular student in any gathering. In 1958, Mr. Luther Jeyasingam a teacher of Jaffna College won his doctorate from the Clarke University of U S A.

At the felicitation function conducted by the College, Mr. Sudar Mahendran was asked to speak on behalf of the students. Mr. Mahendran made a stupendous speech comparing Luther Jeyasingham and Martin Luther. The entire assembly was roaring with laughter. After the function many teachers expressed their appreciation and satisfaction to Mr. Mahendran.

## A Member of the First Eleven;

Apart from the Academic sphere in which Mahendran excelled, he also showed his prowess in the sports field. With much enthusiasm he participated in the Annual inter-house Sports Meet. In 1958 he was a member of the first eleven of the College foot ball team. In the fifties Jaffna College football team was unbeaten. Students from the upcountry, Muslims from Batticaloa and Sinhalese students from the South were struggling to find a place in the first eleven. Mr. R. Mahendran though joined Jaffna College only the previous year was mede centre half of the Team.

## A Talented Writer:

Mr. Mahendran also plunged fully into the journalistic field of the College. Jaffna College runs tow journals - "The Miscellany" the annual magazine of the College and the "Young Idea" a termly publication of the students. Throghout his life Mr. Mahendran was associated with one journal or the other. His originality and imagination were evident even in his school days. "Young Idea" was dited by Mr. S. Yoganathan and latere by Mr. S. Sivasothyrajah during our time. Mr. R. Balasubramaniya Iyar was the Faculty Advisor of the Magazine. By his humorous articles Mr. Mahendran made "Young Idea" popular among the students While being a student Mr. Mahendran made his mark as a creative writer Later when he was studying at the University he won the first prize for the most humorous article in a compitition conducted by the "Ilangathir" the magazine of University Tamil Society.

## A Friend of the Family

When I was a student at Jaffna College my father was Parish priest at Moolai. Because of the intimate friendship between us, Mr. Mahendran used to visit our house very often. At that time some relations of Mr. Mahendran were also living at Moolai. Mr. Ragunathan who contested the parliamantary elections in 1952, his son-in-law, Proctor Cumaraswamy were living near Moolai Pillaiyar Temple. Mrs. Cumaraswamy was a dear friend of my mother. Mr. Mahendran and Mr. Charles Siromani another student in the H S C A, Class frequently visited our house. All the members of my family looked forward for the visits of Mr. Maheadran because he was a very interesting conversationalist. He became a friend of all my brothers.

In 1958 six students in our class gained admission to the University of Predeniya. They were Mr. E C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S i r o m a n i (Nawalapitiya), Mr. S. Suntharalingham (Batticaloa), Mr. R. Mahendran, Mr. S. Sivasothrajah, Mr. S. Pathmanathan (Present Vice Chairman, University Grants Com mission) and Mr. S. Jebanesan. Two Sinhalese students who were in the Entrance Class left us after the Com munal riots of 1958, but entered the University through Schools in South Sri Lanka. All those who entered the University from Jaffna College became clsoe friends and keep their friendship to this day. Mr Sivasothyrajah passed away in his youth. But for the others, God gave a full life.

At the University Mr. R. Mahendran and I joined the same Hall of Residence and studied almost same subjects for the Degree. Mr. Mahendran studied Indian History, while I studied European History.

Mr. Mahendran enjoyed every minute of his University life. Once at Ramanathan Hall a Sinhalese student watching the pranks of Mr. Mahendran remarked "This fellow Mahendran will go home very soon." He was fond of film shows dramatics sports and walks on Galaha Road. Like every capable University undergrad, he also fell in love with a beautiful female student. In short Mr. Mahendran lived a full life and matured into a dependable senior.

After our University career we went in different directions. I joined the tutorial staff of St. Anthonys College, Kandy and Mr. Mahendran came to teach in Jaffna.

Our paths crossed once again when I came to Jaffna in 1969 to serve the American Ceylon Mission at Jaffna College. We had to meet quite often when he became Principal of Kokuvil Hindu and I became Principal of Jaffna College. Once the teacher in charge of Jaffna College football took the team to Kokuvil Hindu for a friendly match, we were beaten by Kokuvil Hindu 5 - nil. I could not control my anger and started scolding the Coach who arranged the Match. Mr. Mahendran in his humorous way consoled me saying "Now don't worry next time my boys will not play like this."

Mr. Mahendran had faced many ups and downs in his life. What has made him a popular character?

At first he was a happy man He will always talk of pleasant things. Dale Carnagie the great Psychologist had said "Talk of happiness the world is sad enough without your woe."

Secondly, Mr. Mehendran is a very respectable personality I have not seen him talking ill of any person. Professor Ruskin said the first test of a truly great man is his humility. Mr. Mahendran did not lose his head at anytime. He moved freely with people of all religions, race and community.

Thirdly, Mr. Mahendran was a trustworthy friend. His commitment to his land, language, School andCommu nity was total.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Valluwar said:

"It is *ignoble* to forget kindness but an injury received it is part of nobility to forget at once"

In this world of cut thorat competition, opportunism and rat race, I find Mr. Mahendran a man full of gratitude.

As he completes his sixtieth year, I wish him many more years of fruitful service to his homeland and its people.

I end this tribute with the memorable words of Mr. E. A. Champion our Ceylon History teacher at Jaffna College.

"Forty years have disappeared

"Like an evening gone" In the very

act of writing this tribute, I make

my own pilgrimage to hallowed moments,

people and places and feel young again.

There in lies great mystery of the act of remembrance."

**Rt. Rev. Dr. S. Jebanesan**
**(C S I Bishop in Jaffna)**

Vaddukoddai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் இந்துக் கல்லூரியிலே நான் ஆறாந் தரத்தில் கற்றுக் கொண்டிருந்த போது ஒரு நாள் தேநீர் இடைவேளைக்கு அடுத்த பாடவேளை மேல்மாடியிலுள்ள வகுப்பு மாணவர்கள் யாவரும் அடங்கி பேச்சு மூச்சின்றி அமைதியாக இருந்தார்கள். குண்டூசி விழுந்தால் சத்தம் ஓசையுடன் கேட்கும், அவ்வளவு அமைதி நிலவியது. கல்லூரியிலே புதியவனான எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. நானும் அமைதியாக இருந்தேன். மேல்மாடி மண்டபத்தில் ஒரு மெல்லிய உருவம் உலா வருவதைக் கண்டேன். எனது வகுப்பறையை அந்த உருவம் கடந்த பின்னர் பக்கத்தில் உள்ள நண்பனைக் கேட்டேன் இவர் யார் என்று. அப்போது தான் அவர் மகேந்திரன் மாஸ்ரர், அவர் கண்டபடி திரிந்தால், கதைத்தால் நொருக்கிப் போடுவார். அது தான் இவ்வளவு அமைதி நிலவுகிறது என்றான். அந்த நாள் தொடக்கம் திரு. இ. மகேந்திரன் ஆசிரியரை கண்டால் எனக்கு ஒரே பயம். அவரைக் கண்டால்நான் விலகியே செல்வேன்.

பின்னர் அப்போது இருந்த **Prep S. S. C** வர்த்தக வகுப்புக்கு நான் தெரிவு செய்யப்பட்டு முதல் நாள் வகுப்பு ஆரம்பமாகிய போது முதல் பாடவேளையின் போதே திரு. இ. மகேந்திரன் ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தார். நாங்கள் எல்லோரும் எழுந்து வணக்கம் தெரிவித்து விட்டு அமர்ந்தோம். திரு. இ. மகேந்திரன் ஆசிரியர் எங்களுக்கு வகுப்பாசிரியர் தான் என்றும், எண்கணித பாடம் கற்பிக்கப் போவதாகவும் தெரிவித்தார். எனக்கு தலையே சுற்றுவது போல இருந்தது. வகுப்பாசிரியரும், எண்கணித பாட ஆசிரியரும் திரு. இ. மகேந்திரன் ஆசிரியர் என்றால் எப்படி காலம் கழியப் போகிறதோ என்ற பய உணர்வுடன் வகுப்பிலே இருந்தேன். நாட்கள் கழிந்தன. மெல்ல மெல்ல அவருடன் பழகத் தொடங்கினேன். அவரும் எளிமையாகவும், இனிமையாகவும் எம்முடன் பழகினார். எனக்கு பின்பும் ஒரே ஆச்சரியம். கண்டிப்பான ஆசிரியர் எப்படி எளிமையாகப் பழகுகிறார் என்று. ஆம் உள்ளத்திலே அன்பும் வெளியிலே கண்டிப்பும் உள்ள திரு. இ. மகேந்திரன் ஆசிரியர் எனது வாழ்வுக்கு ஒளியேற்றினார் என்று கூறுவதில் பெருமை அடைகிறேன். கலைப்பட்டதாரியான திரு. மகேந்திரன் ஆசிரியர் எண்கணித பாடத்தை இலகுவாக, எளிமையாக, துல்லியமாக போதிப்பதில் அவருக்கு நிகர் அவரே தான். எங்கள் வகுப்பில் உள்ள அன்றிருந்த ஒரு மாணவன் தவிர்ந்த ஏனைய முப்பத்தெட்டு மாணவர்களும் பரீட்சையிலே அப்பாடத்தில் நல்ல பெறுபேற்றை பெற்றோம். இப்பாடத்தைப் போதிக்கும் போது அவர் "பள்ளிக்கணக்கன் புள்ளிக்குதவான்" என்று கூறுவதை அடியோடு மாற்ற வேண்டும் எனக் கூறிக் கூறி எமக்கு அப்பாடத்தில் தந்த பயிற்சியும் புகட்டிய அறிவும் தான் நான் இன்று க. பொ. த உயர்தர வகுப்பிற்கு கணக்கியலைச் சிறப்பாக கற்பிக்கக் கூடிய வல்லமை பெற்றேன் என்று கூறுவதில் உவகை அடைகின்றேன்.

அன்பு, கருணை, இரக்கம், மனிதநேயம், புரிந்துணர்வு ஆகிய நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட திரு. இ. மகேந்திரன் ஆசிரியர் அவர்கள் எனக்கு க. பொ. த உயர்தர வகுப்பிலும் தமிழ் பாடத்தையும் போதித்தார். தமிழ் பாடத்தை அவரிடம் கற்றுக் கொண்டு இருந்தால் நேரம் போவதே தெரியாது. இலக்கியச் சுவை அவருக்கு கைவந்தகலை. இலக்கியப் பகுதியை கற்பிக்கும் போது அப்பாத்திரத்தின் தன்மையை அவர் பெற்று அப்பாத்திரத்தைப் போலவே நடித்துக் காட்டி போதிப்பார். அவரிடம் வகுப்பிலே சிறப்பாகக் கற்றால் அதைப் பின்பு மீட்க வேண்டிய அவசியம் இல்லை. அவ்வளவுக்கு அப்பகுதி மனதில் பதிந்துவிடும். அவரது தமிழ் மொழித் திறன் அபார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது. அவரது வாயிலே கன்னித்தமிழானது தங்கு தடையின்றி பொங்கு நுரை யோடு பெருக்கெடுத்து பாய்வதை இன்றும் அசை போட்டு பார்க்கிறேன். தமிழ் இலக்கிய வரலாற்றிலே சங்ககாலப் பகுதி, சோழர் காலப்பகுதி இன்றும் பசுமரத்தாணி போல் எனது நெஞ்சிலே பதிந்துள்ளது என்றால் எனது ஆசானின் கற்பித்தல் - கற்றல் செயற்பாடுகள் வகுப்பறையிலே எவ்வாறு நிகழ்ந்து இருக்கும் என்பது சொல்லாமலேயே விளங்கும். அவரிடம் கற்ற இலக்கிய பாடல் வரிகள் தான் இன்று எனக்கு மேடைகளிலே கைகொடுக்கின்றன.

திரு. இ. மகேந்திரன் அவர்களின் கற்பித்தலில் மட்டுமன்றி ஏனைய இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி மற்றவர்களையும் ஈடுபடச் செய்வதில் வல்லவர். அவரது வழிகாட்டலிலேயே நான் சாரணியத்தில் இணைந்து சேவை செய்ததோடு நியத்தலாவையில நடந்த சாரணிய விழாவிலே கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். அங்கு தான் நான் அவருடன் மிக நெருக்கமாக பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆசானாகக் கண்ட திரு. இ. மகேந்திரன் அவர்கள் மிக தோழமை உணர்வுடன் பழகிய போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மனம்விட்டு எதையும் கதைத்து ஆலோசனைகளை வழங்கி வாழ்வின் உயர்வுக்கு வழிகாட்டும் வள்ளல் அவர்.

நாம் க. பொ. த உயர்தரப் பரீட்சையிலே சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகிய போது எம்மிலும் பார்க்க, எமது பெற்றோரிலும் பார்க்க மிக்க மகிழ்ச்சி அடைந்தவர் என்றால் திரு. இ. மகேந்திரன் ஆசான் அவர்களே. எங்களை அழைத்து உச்சிமோந்து "ஈன்ற பொழுதில் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்.'' என்ற குறளுக்கு இலக்கணமாக விளங்கினார். வகுப்பறைக்குள்ளே கண்டிப்பாகவும் வெளியிலே அன்பாகவும், பண்பாகவும் எமை வழி நடத்திய ஆசான் அவர்கள் கொக்குவில் இந்துவிலே ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக, கொத்தணி அதிபராக பல பதவிகளை வகித்து கொக்குவில் வாழ் கல்விச் சமுதாயத்திற்கு உரமூட்டி கல்விப் பயிரை வளர்த்து இன்று இலங்கைத் தீவின் எல்லாப் பகுதிகளிலும் தனது எச்சங்களை உயர் பதவிகளில் அமரச் செய்து தனது அறுவடையை அதிக விளைச்சலுடன் செய்து இருக்கிறார். அவர் அதிபராக இருந்த போது கொக்குவில் இந்துவிலே நடைபெறுகின்ற பொது நிகழ்ச்சிகளுக்கு எமை அழைத்து மகிழ்வார். விருந்தோம்பலில் கனிவான ஆசான் அவர்கள், ''வணிகஒளி'' முதல் வெளியீட்டின் போது முதன் முதலில் கொக்குவில் இந்துவில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான வணிகத்துறை மாணவர்களாகிய எங்களை அழைத்து கௌரவித்து கேடயங்களை வழங்கியதோடு எனக்கு 'கணக்கியல் புலி' என்று நாமம் சூட்டி அகமகிழ்ந்து கொண்டதும் என்னை மேடையிலே கௌரவித்த காட்சியும் என் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.

திரு. இ. மகேந்திரன் ஆசான் அவர்கள் கல்விச்சேவை செய்து கல்லூரியிலே நிர்வாகச் சேவை செய்து தனக்கென ஒரு முத்திரையை பதித்து புகழ்பூத்த அதிபர்களில் ஒருவராக விளங்கி வரும் வேளையிலே குடா நாட்டின் பாரிய இடப்பெயர்வு அவரது சேவைக்கு சிறு தடையாக அமைந்த போதும் இடம் பெயர்ந்த இடத்திலே கல்வி அதிகாரியாக கல்விச் சேவை செய்து மீண்டு இன்று தனது அறுபதாவது வயதிலே ஓய்வு பெற்றுள்ளார். அவரது சேவையை மீண்டும் நினைவு கூருவதோடு அவர் தன் மனைவி, மக்களுடன் நீண்ட ஆயுள் பெற்று தேக சுகத்துடன் இன்னும் பல்லாண்டு நீடூழி வாழ எல்லாம் வல்ல வைத்தீஸ்வரன் அருள் பாலிக்க வேண்டும் என்று இறை ஆசி வேண்டுகிறேன்.

வைத்தீஸ்வராக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

**நா. வன்னியசிங்கம்**
அதிபர்.

# எனது குரு

அன்பின் உறைவிடமாம் மதிப்பிற்குரிய எனது குருவுக்கு மணிவிழா எடுப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கொக்குவில் இந்துக்கல்லூரி அன்னையின் வரலாற்றில் இவரின் சேவை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவையே. கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கொக்குவிலுக்கு அவர் ஆற்றிய சேவை மூலம் ஒவ்வொரு கொக்குவில் வாழ் மக்கள் மனத்திலும் அழியாத இடத்தைப் பெற்றுள்ளார்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"

மகேந்திரன் மாஸ்ரர் என அன்போடு அழைப்போம் எங்கள் ஆசானை, வெள்ளை நிற உடை. உடையைப் போலவே உள்ளமும் தூய்மை, நிமிர்ந்த நன்னடை, சுறுசுறுப்பான சுபாவம், கடமையிற் கண்ணியம், மாணவர்க்குத் தந்தை, தகுந்த ஆலோசகர், சக ஆசிரியர்களுக்கு நல்ல நண்பன், ஒழுக்கத்தில் தூய்மை, சிரித்த முகம், சேவை மனப்பான்மை, பாடசாலைப் பற்று, நிர்வாகத் திறமை இவையெல்லாம் நான் இவரிடம் கண்ட உயர்ந்த பண்புகளே.

எனது இடை நிலைக்கல்வியை (61 - 69 காலப்பகுதி) கொக்குவில் இந்துக் கல்லூரியில் தொடர்ந்த போது அவரிடம் கற்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன். க. பொ. த. உயர்தர வகுப்பில் 'அரசியல் என்னும் பாடத்தை அன்போடு ஊட்டியவர். அவர் பாடம் கற்பிக்கும் விதமே அலாதி. வகுப்பினுள் நுழைந்தால் பாடம் முடியும் வரை வீண் பேச்சுக்கே அங்கு இடமில்லை. வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல் இலகுவாக அரசியல் அறிவை அள்ளித் தந்தவர்.

கற்றல் நடவடிக்கை மட்டுமல்ல இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அவர் எங்களுக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. சாரணர் வழிகாட்டி நிகழ்வுகள் கல்லூரியில் நிகழ்வதுண்டு. அதற்கு எப்போதும் முன்னின்று சுறுசுறுப்பாக உழைத்தமையை நான் வழிகாட்டியாக இருந்த காலத்தில் அவதானித்துள்ளேன். எந்த ஒரு விடயத்தையும் சரியாக ஒழுங்காகச் செய்து முடிக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்ட அவர், எம்மை ஒரு கட்டுக்கோப்புக்குள் வழிநடத்தி ஒழுங்காகச் செயற்படச் செய்த பெருமைக்குரியவர்.

விளையாட்டுப் போட்டி என்றால் அவரது கணீரென்ற குரல் ஒலிபெருக்கியில் காற்றினலைகளினால் தவழ்ந்து வரும். எல்லா நிகழ்வுகளும் நிறைவாகச் செய்து முடியும் வரை ஓய்வே இன்றி சுற்றி வருவார்.

மாணவர்களாக இருக்கும் காலத்தில் எங்களுக்கு இவரிடம் பயமும் மிகுந்திருந்தது. ஏனெனில், கண்டிக்க வேண்டிய இடத்தில் யாராக இருந்தாலும் தண்டிக்காமல் விடமாட்டார். 'அடிக்கிற கை தான் அணைக்கும்' என்பார்கள். அவருக்கு ஏற்படும் கோபமும் கண நேரம் மட்டுமே. உடனேயே கோபத்தை மறந்து சமாளித்து விடும் பெருந்தன்மையும் உடையவர். இத்தனையும் எனது மாணவப் பருவ காலத்தில் நான் அவரிடம் கண்டு கொண்ட சீரிய பண்புகள்.

நான் வெளிமாவட்டங்களில் பதினான்கு வருடங்கள் எனது சேவையைப் பூர்த்தி செய்து மீண்டும் கொக்குவில் வந்து சேர்ந்த போது உப அதிபராகக் கொக்குவில் இந்துக்

கல்லூரியில் ஆசான் கடமையாற்றியதை இட்டு மிக மகிழ்ந்தேன். நான் கற்றதோடு மட்டுமல்ல எனது பிள்ளைகளும் அவரின் காலத்திலே கொக்குவில் இந்துவில் கற்றது நான் செய்த பெரும் பேறே.

கொக்குவில் மேற்கு சி. சி. த. க வில் நான் அதிபராகக் கடமையேற்ற போது, கொக்குவில் இந்துவின் அதிபராகக் கடமையேற்றார். கொத்தணி அதிபராக இருந்த அவரின் ஆலோசனைகளுடன் அவரின் கீழ் கடமையாற்றும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றேன். சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட அவரிடமிருந்து பற்பல விடயங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

எமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி போன்ற நிகழ்வுகளில் அழைக்கும் நேரங்களிலெல்லாம் தட்டிக்கழிக்காது பிரதம விருந்தினராகவோ, சிறப்பு விருந்தினராகவோ கலந்து கொண்டு எம்மை ஊக்கப்படுத்தியதோடு சின்னஞ்சிறுவர்களையும் தமது பேச்சாற்றலால் கவரும் ஆளுமை கொண்டவர் எமது ஆசான்.

பதவிகளில் உள்ளவர்கள் சிலர் சொல்லில் வீரர்களாக இருப்பர். சிலர் செயலில் வீரர்களாக இருப்பர். சொல்லும் செயலும் ஒன்றாக இருப்போர் வெகு சிலரே. அந்த வகையில் மனம், வாக்கு ஒருமித்து செயற்பட்டவர்களில் எங்கள் அன்பு அதிபர் ஒருவர்.

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''

தன்னலங் கருதாது கல்லூரியின் உயர்ச்சிக்கும் மாணவரது அறிவு ஒழுக்கம் என்பவற்றுக்கும் வித்திட்டு அயராது உழைத்தவர். தனக்கென்றோர் பாதை வகுத்து அதன் வழி நடந்து தன்னிறைவு கண்ட உத்தமர்.

''துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை''

என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

தனது மனத்துக்குச் சரியெனப் பட்டதை தற்துணிவுடன் செய்து நிறைவேற்றும் கர்மவீரர்.

இக்கட்டான சூழ்நிலையில் இடப்பெயர்வு ஏற்பட்ட போது இடம் பெயர்ந்து உதவிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் மீண்டும் யாழ். மண்ணில் உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து இன்று மணிவிழா காணும் பாக்கியம் பெற்றுள்ளார்.

சட்டவிதிகளுக்குத் தலைபணிந்து ஓய்வு பெறும் எமது குருநாதருக்கு என்றும் எமது சமூகம் தலை வணங்கும்.

''குன்றாத வளமையும் குன்றாத இளமையும் கழுபிணி இலாத உடலும்'' பெற்று பல்லாண்டு காலம் சமூக சேவையில் சுடர் விட்டு பிரகாசிக்க எல்லாம் வல்ல இறைவி அருள் புரிவாளாக.

**திருமதி. மாலினி வேதநாதன்** B. A. (Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை வரலாறு

**பிறந்தநாள்** — 1939-05-18

**கல்வி** —

1943 — யாழ். இந்து தமிழ் பாடசாலை

1947 — யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (H. S. C. வகுப்புவரை)

1957 — யாழ்ப்பாணக் கல்லூரி
— H. S. C. —
— பல்கலைக்கழக அனுமதி

1958 — இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதெனியா பட்டப்படிப்பு

1980 — கொழும்பு பல்கலைக்கழகம் பட்டப்பின்படிப்பு

**பரீட்சைகள்** —

1954 — SENIOR SCHOOL CERTIFICATE
GENERAL CERTIFICATE OF EDUCATION

1958 — HIGHER SCHOOL CERTIFICATE

1963 — B. A

1976 — FIRST EXAMINATION IN LIBRARY SCIENCE

1980 — DIPLOMA IN EDUCATION

**ஆசிரியர்சேவை** —

1960 - 10 - 05 - கொக்குவில் இந்துக் கல்லூரி

1972 — வ / ஓமந்தை ம. வி.

1975 — கொக்குவில் இந்துக் கல்லூரி

1980 — மாங்குளம் ம. வி.

1984 — கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதிஅதிபர்
அதிபர் (பொறுப்பு)
கொத்தணி அதிபர் — கொக்குவில்

1993 — சிறிலங்கா அதிபர் சேவை தரம் I

1996 — யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996 — மாந்தை கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி,
பிரதிக் கல்விப்பணிப்பாளர்

1998 - 10 - 01 – உதவிக் கல்விப் பணிப்பாளர்
(துணுக்காய் கல்விவலயம்)

1999 - 04 - 28 – உதவிக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம் கல்விவலயம்

1999 - 05 - 17 – இளைப்பாறுதல்

## கொக்குவில் இந்துக் கல்லூரி

1) உதைபந்தாட்டம் — பயிற்றுநர்

2) மெய்வல்லுநர் — பயிற்றுநர்

3) ஹொக்கி — பயிற்றுநர்

4) விளையாட்டுப் பொறுப்பாசிரியர்

5) குழுச் சாரணத் தலைவர்

6) உயர்தர மாணவர் ஒன்றியம் — பொறுப்பாசிரியர்

7) இந்து மன்றம் — பொறுப்பாசிரியர்

8) கல்லூரி சஞ்சிகை — பொறுப்பாசிரியர்

9) கனிஸ்டகடேற்குழு — முதலாவது பொறுப்பாசிரியர்

10) பிரதி அதிபர்

11) அதிபர்

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

1) சிரேஸ்ட மாணவர் தலைவன்

2) 2ம் XI — உதைபந்தாட்டக் குழு தலைவன்

3) கல்லூரி மெய்வல்லுநர் குழு அங்கத்தவர்

4) பசுபதி இல்லம் — தலைவர்

5) வரலாறு — குடியியல் சங்கம் — தலைவர்

6) அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாணக் கல்லூரி**

1) உதைபந்தாட்டக் குழு 1ம் XI
2) மெய்வல்லுநர் குழு அங்கத்தவர்
3) தமிழ்ச்சங்கம் — தலைவர்
4) இளஞாயிறு — பத்திராதிபர் குழு
5) பேச்சுப் போட்டி — 1ம் இடம்

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

1) இந்து மன்றம் — செயலாளர்
2) தமிழ்ச் சங்கம் — செயற்குழு உறுப்பினர்
3) சமூகக்கழகம் — தலைவர்
4) மண்டபங்களுக்கிடையான விவாதம் — சிறந்தபேச்சாளர்
5) இந்து தர்மம் — கட்டுரைப் போட்டி 1ம் இடம்

**உதைபந்தாட்டம் பயிற்றுநர்** J. S. S. A

கொக்குவில் இந்துக்கல்லூரி — 3ம் XI — CHAMPIONS — ONCE
2ம் XI — RUNNERS UP (THRIC)
1ம் XI — CHAMPIONS — TWICE

**சாரணியம்**

1) குழுச்சாரணத்தலைவர் — ஒருவருடத்தில் 21 இராணிச் சாரணர் (இலங்கை சாதனை)
ஒருவருடத்தில் 13 இராணிச் சாரணர்
இலங்கை சமூகசேவை — 1ம்இடம
2) 1967 — பிலிப்பைன்ஸ் இளைஞர் மாநாடு
3) யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் — 1994
4) முல்லைத்தீவு சாரண ஆணையாளர் - 1998

**உதைபந்தாட்டம்**

1) J. S. S. A — செயலாளர்
2) J. D. F. R. A — செயலாளர், பிரதித்தலைவர்
3) J. S. C. A — பிரதித்தலைவர்

**வடமாகாண ஆசிரிய சங்க சகாயநிதி** — செயலாளர், தலைவர்

**சைவபரிபாலன சபை** — தலைவர்

**இந்து சாதனம்** — ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் இணைப்பு

# அதையேன் கேட்கிறியள்?

மூன்று மணி நேரம் கடுந்தவம் புரிந்து இடிபட்டு, ஒருபடியாக பஸ்சில் ஏறி, 'அப்பாடி' என்று கூறிக்கொண்டே கடைசி ஆசனத்தில் அமர்ந்தேன். எமது நிலையைக்கண்டு பரிதாபப்படுவதுபோல் கடகட வெனச் சத்தமிட்டுக் கொண்டே ஓடிக் கொண்டிருந்தது அந்தப் பழைய பஸ். "அதையேன் கேட்கிறியள்? அந்தக் காலத்தில் நாங்கள் ராசாவைப் போல இருந்த இருப்பென்ன? இப்ப அடிமைபோல வாழ்கிறவாழ்க்கையென்ன? இதுக்கெல்லாம் காரணம் எங்கடை நடையுடை பாவனை தான் பாருங்கோவென்று நடுத்தெரு நாகலிங்கம் வாய் நிறைய வெற்றிலையுடன் 'லெக்சர்' அடித்துக் கொண்டிருந்தார். 'கப்பலோட்டிய தமிழன் கப்பலேற்றப்பட்டது எதனாலே? நம்மிடமுள்ள சில குறைபாடுகளினாற்றான் என்பதில் சந்தேகமா?

"என்றைமோன் எஸ் எஸ். சி பாசு பண்ணிப் போட்டான், மெல்லக் கிளரிக் கலிலே சேர்ந்திட்டானென்றால, ஒருமாதிரி அறுபதினாயிரம் சீதனம் வாங்கிப் போடலாம். இவ்வாறு தான் தமிழர்களில் பலர் பல காலமாக கோட்டை கட்டியிருந்தனர். கொழும்பிலே உத்தியோகம் என்றால் கைலாசம் போனமாதிரி. அரைகுறை ஆங்கிலத்துரை போல வாழ்ந்தவர்கள். உழுவதோ அன்றி வேறு தொழிலைச் செய்வதோ அவமானமென எண்ணினர். ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. பேப்பரிலே பேனாவினால் கிளறியவர்கள் மண்ணைக் கிளறுவது மேலென எண்ணினர். ஆனால் அது கூட நம்மால் செய்ய முடியாதே என அலறினர். இனித் தொழிற் கல்விதான் கற்க வேண்டுமென்றனர். இதெல்லாம் சூட்டோடு சூடாக நடந்தவைகள். சூடு ஆறிவிட்டது. கஞ்சி பழங்கஞ்சியாகியது. அதையேன் கேட்கிறியள்? கொழும்பு கொழும்புதான் பாருங்கோ! வருகிற தைக்குப் பழைய படி போறம் என்று பெருமை பேசும் பெண்களைத் தான் காண முடிகின்றது. என்றது இன்னொரு குரல். நான் யோசித்தேன்? ஈழத்தமிழரிலே எவராவது அஞ்சாது புதுமாதிரித் தொழில் தொடங்கியதுண்டா? எதற்கெடுத்தாலும் ஆயிரம் யோசனை. நட்டம் வந்தால் என்ன செய்வது? தாயகத் தோழரைப் போல் தயங்காது எத்துறையிலும் பிரவேசிக்க வேண்டும் விடாமுயற்சி வெற்றி தரும்.

நாட்டின் எதிர்காலம் தொட்டிலை ஆட்டும் நங்கையரின் கையில் தான் இருக்கின்றது. அப்பொறுப்பை சரி வரச் செய்வார்களா? சந்தேகமே? இஞ்சாருமப்பா? அந்தக் கேர்ல் போட்டிருக்கிற சட்டையென்னப்பா? நாகரிகப் பைத்தியம் பெண்களுக்கு அதிகம் கூடாது. தமிழன்னைக்கும் தேசத் தொண்டு செய்ய முன்வர வேண்டும். பாரதியின் புதுமைப் பெண்களாகத் திகழ வேண்டும். எம் எண்ணம் ஈடேறுமா? உதாரணமாக எமது 'இளஞாயிறு' பெண்கள் பகுதி பலகாலமாக யாருமற்ற அனாதைபோல் காட்சியளிப்பது பரிதாபத்திற்குரிய தாம். இப்பெரிய கல்லூரியிலே எழுதும் வன்மையுடைய பெண்களே இல்லையா? கட்டுரை எழுதாது அவர்கள் இருப்பதேன்? இவ்வாறு அவர்கள் அலட்சியமாக இருப்பது தமிழன்னைக்கு இழைக்கப்படும் அநீதியாகும். பெண்கள் குலத்துக்கே அவமானமாகும்.!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனை காலம் வந்தாலும் வந்தது. அதையேன் கேட்கிறியள்? இரா இராவா கண் விழித்துப் படித்துப் பேயடித்தவர்கள் போல் காட்சியளிப்பவர்கள் சிலர். உதைப்போல எத்தனை சோதனை வந்து போகுமென்று சோதனைக்கே சோதனையாக விளங்குபவர் பலர் மழை காலத்தில் தேடி சோதனைகளை வைக்கிறார்களே! மழைக்குளிர் நம்மை நடுங்க வைக்கின்றது சோதனைப் பயம் நம்மைக் திடுதிடுக்க வைக்கின்றது. என்னே ஒற்றுமை!

சுற்றிக் கொண்டேயிருக்கும் உலகத்துடன் மாங்காய் உருவங் கொண்ட நம் ஈழமும் சேர்ந்து சுற்றிக் கொண்டேயிருக்கின்றதென்பதை யாரால் மறுக்க முடியும். ஆனால் இலங்கையிலிருக்கும் எமக்கோ ஏதோ நம்நாடு தலை கீழாகச் சுற்றுவது போலல்லவா தோன்றுகிறது. எடுத்ததிற்கெல்லாம் வேலை நிறுத்தம், சற்றே கோபமாகப் பேசினால் கத்தரிக்காயைச் சீவுவது போல் கொலை, கொள்ளை, வெள்ளம், வகுப்புக் கலவரம், சுயநலம், ஐயோ! எண்ணவே முடியாது. நமது நாட்டின் நிலைமை? கீரிச்! அடடே! வட்டுக் கோட்டை வந்து விட்டது. யாழ்ப்பாணக் கல்லூரி கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது இறங்க வேண்டும். சரி, போய் வரட்டுமா?

நன்றி: இளஞாயிறு 1958-12-13

**சுடர் இ. மகேந்திரன்**
**H. S. C. (Arts)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ் மன்றத் தலைவராக பாரதி விழாவுக்குத் தலைமை வகிக்கும் இளைஞர் மகேந்திரன். அருகில் இருப் பவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.



1958ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி உதைபந்தாட்ட அணியின் முன்னணி வீரராக விளையாடியபோது. (வலது புறத்தில் இரண்டாவதாக அமர்ந்திருக்கின்றார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1967 ஏப்பிரல் 22 முதல் மே 11 ஆம் திகதிவரை பிலிப் பீன்ஸின் பாகியோ நகரில் முதலாவது ஆசிய இளைஞர் மகாநாடு நடைபெற்ற சமயம் அதன் அமர்வு ஒன்றுக்குத் தலைமை வகிக்கும் இளைஞர் மகேந்திரன். (மத்தியில் 'ரை'யுடன் அமர்ந்திருக்கின்றார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிலிப்பீன்ஸ் நாட்டில் ஏனைய சாரணர் தலைவர்களுடன் இளைஞர் மகேந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org